
# சமூகவியல் நிபுணரான முதலியாரின் வாழ்வும் - வளமும்




302.156

வள்ளுவர் ஆண்டு
2043

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
14.01.1934

உதிர்வு
14.10.2012

# அமரர்

## சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார் (சு.நீ)

# திதி நிர்ணய வெண்பா

நந்தன வருடம் நல்ல திங்கள் புரட்டாதி இருபத்தெட்டில்
சுந்தர வடிவன் எங்கள் சுடர் முதலியார் என்பார்
அந்திரிக்க இடையில் விட்டு சதுர்த்தசி திதி தன்னில்
விநாயகரடி சேர்ந்தார் காண்மின்.

302.158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்
கொண்டு வாழ்ந்த

## *சி.பொ.வ.மா.க. முதலியார் (ச.நீ)*

**இக்காலப்பகுதியில்**

- சமாதான நீதவானாக
- மத்தியஸ்தனாக
- விவசாயிகளின் தோழனாக
- விவசாயிகளின் மன்னனாக
- விவசாயிகளின் தந்தையாக வாழ்ந்து வழிகாட்டி

**அன்புள்ளங்களை ஒருங்கிணைத்து சிவபதமடைந்த**

**முதலியார் ஐயா**

குறித்த

# ஆய்வு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

இம்மண்ணில் பிறந்து சேவையின்
செம்மலாக புகழ் வளர்த்தவரே
இம் மண்ணை விட்டு ஏன்
மறைந்தாயோ உன்னை நினைத்து
தினமும் நாம் கண்ணீர் கசிந்து
நிற்கின்றோம் எம் தெய்வமே
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதக்
கமலங்களுக்கு இம்மலர் காணிக்கை.



– குடும்பத்தினர் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்னையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

கடயவ னேனைக் கருணையினாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப்பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனொடு ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமைந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரிய சித்தி மாலை

1. பந்தமகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்

2. உலக முழுவதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன் - அவ்
உலகில் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீழும் பஞ்செஎன மாயும்
தொடரு முயிர்கள் எவனருளால்
சுரர் வாழ்பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கரும மெவனால் முடிவுறும் - அத்
தடவு மருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மூர்த்தியாகி தலமாகி
முன் நீர்க் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தி னாலு முயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அறிவிப்பா னெவன் - அப்
போர்ந்த கருணைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப் படுமப் பொருள் யாவன்
ஐயமின்றி உள தாகு
மந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பா னெவன் அந்த
பொய்யில் இறையைக் கணபதியை
புரிந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதமளந்து அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடனவிலும்
விமலன் யாவன் விறங்கு பர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாத னெவன் எண்குணவனெனப்
போத முதலைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணி னோரைங் குணமாகி
வதிவா னெவன் நீரிடை நான்காம்
நண்ணி அமர்வா னெவன் தீயின்
மூன்றாய் நவில்வா னெவன் வளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணு மிரண்டு குணமாகி
இயைவா னெவன் வானிடை ஒன்றாய்
மண்ண லெவன் அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாசவறிவில் பசுவறிவில்
பற்றற் கரிய பரன் யாவன்
பாசவறிவில் பசுவறியும்
பயிலப் பணிக்கு மவன் யாவன்
பாசவறிவும் பசுவறிவும்
பாற்றி மேலாமறிவான
தேசனெவன் அக் கணபதியைத்
திகழச் சரணமடைகின்றோம்.

# விநாயகர் அகவல்

## காப்பு

**அற்புதவி நவயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்**
**சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்**
**சொற்கொருளெல் லாங்கடந்து தாய்தாம் மெஞ்ஞானமிகு**
**கற்பக விநாயகன்றான் காப்பு**

சீதக் கடபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசைப் பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாராக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாவிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூலும் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
மும்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தனில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாட் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடையிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து முண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடச்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக் கருளி
என்னை அறிவித் தெனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆன்ந்தத் தழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின்னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையத் தந்தென்னை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

வீநாயகர் அகவல் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முதலியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு



இந்து சமுத்திரத்தின் முத்தென ஒளிரும் ஈழத்திருநாட்டின் கிரீடமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் பல்வளம் நிறைந்தொளிரும் சண்டிலிப்பாய் பிரதேசத்தின் முக்கிய பகுதியாய், வயலும் வயல் சார்ந்ததுமான மருதநிலமாக இயற்கையெழில் கொழிக்கும் பச்சைப்பசேல் என மரகதப்பட்டாடை போர்த்தியது போல, நெடிதுயர்ந்த நெற்பயிர்கள் நிறைகழனிகட்கு நீர்ப்பாய்ச்சுவது போல், சலசலவென்று அம்பனையிலிருந்து ஓடிவந்து பயிர்களைப் போசிப்பது போல வழுக்கையாறு குளிர்ச்சியுடன் எந்நாளும் அருகாமையில் தடவிக் கொண்டோடும் சண்டிலிப்பாய் கிராமத்தில் புகழ்பூத்த சைவவேளான் மரபில் வந்தவர் காலிங்கராஜன் முதலியார் அவர்கள்.

அவரின் வழித்தோன்றலான ஐயம்பிள்ளை பொன்னம்பலம் அவரைப்போலவே சைவவேளான் மரபில் உதித்த ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் வன்னியசிங்கம் மாப்பாண முதலி, குலநாயக மாப்பாண முதலி, மாப்பாணமுதலி வழிவந்தவர் சின்னத்தம்பி திரு. பொன்னம்பலம் அவர்கள். சின்னத்தம்பியின் மகள் நாகம்மையை மணம்புரிந்தார்.

சின்னத்துரை முதலியார் 1895ம் ஆண்டு மார்கழி மாதம் 12ம் திகதி சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார். இவர் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று கேம்பிரிஜ் யூனியர் பரீட்சையை 1913லும் சீனியர் பரீட்சையை 1916ம் ஆண்டிலும் தேர்வடைந்து பின் மலேசியா சென்று மேற்கல்வியைத் தொடர்ந்ததுடன் 01.07.1920ம் ஆண்டு ஆங்கில விரிவுரையாளர் பதவியையும் ஏற்றார்.

பின்னர் இலங்கை திரும்பிய அவர் சண்டிலிப்பாய் இரண தண்டிகை கனகராய முதலியார் வழித்தோன்றலான பேரம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைநாயகி மீனாட்சி தம்பதியின் சிரேஷ்ட புத்திரியான விசாலாட்சி அம்மையாரை 1930ம் ஆண்டு திருமணம் செய்தார். திருமணவிழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



திருமணம் முடிந்த பின் மனைவியுடன் மீண்டும் மலேசியா சென்றார். அங்கே 1932ம் ஆண்டு ஆடி மாதம் 1ம் திகதி ரோகிணி நட்சத்திரத்தில் இவரது சிரேஷ்ட புத்திரனான ஓங்கார வடிவேலு கதிர்காம முதலியார் பிறந்தார். அங்கே அமைதியாகவும், ஆனந்தமாகவும் வாழ்க்கை நடாத்தினார்.

இக்காலத்தில் மலேசியாவில் வெள்ளையரின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டங்கள் தொடங்கின. இவர் அந்தப் போராட்டங்கட்குத் தலைமை வகித்ததால் **நிர்ப்பந்தமாக நாடு கடத்தப்பட்டு** மீண்டும் சொந்த ஊரான கட்டுடை யை வந்தடைந்தார்.



1933ம்ஆண்டு மானிப்பாய் கிராம சபையின் கட்டுடை வட்டாரத்திற்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் சின்னத்துரை முதலியார் யாழ்ப்பாண சங்கத்தின் (Jaffna Association) நிர்வாக உறுப்பினராகக் கடமையாற்றியதுடன் இடைநேரத்தில் சட்டநூல் நிலையத்தில் தேவைப்பட்டோருக்குச் சட்ட ஆலோசனையும் வழங்கினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சமூக சேவையிலும், தமிழிலும் ஆர்வம் கொண்டது போலவே தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அதனால் குடியேற்றச் செயலாளருக்கு (Colonial Secretary) தமிழரின் உரிமைகள், எதிர்காலம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் தனது எண்ணக்கருத்தில் தோன்றிய கருத் திட்டங்களை தீர்வுக்கான வழிகளை டொனமூர் ஆணைக் குழுவிற்கும், பின் சோல்பரி ஆணைக்குழுவிற்கும் பரிந்துரைத்தார்.

தமிழர் அரசியல் உரிமை பெறவேண்டின் தமிழ்க் கட்சி ஒன்று உருவாக வேண்டுமென்று உணர்ந்து ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோருடன் இணைந்து தமிழ் காங்கிரஸ் கட்சியை உருவாக்கியதுடன் அதன் நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றினார். 1945ம் ஆண்டு இவரைத் தேர்தலில் நிற்கும்படி (வட்டுக்கோட்டை தொகுதிக்கு) காங்கிரஸ் கட்சி கேட்டபோதும் அவர் அதனை மறுத்து மக்களோடு மக்களாகவே சேவை செய்ய விரும்பினார்.

1953ம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி இவர் மானிப்பாய் பட்டினசபைத் (Town Council) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுப் பதவியைப் பொறுப்பேற்றார். பல பயன் தரு திட்டங்களையும் செயற்படுத்தினார்.



அமரரின் கோவில்

மறைமலையடிகளின் தமிழியற் கொள்கைகளில் ஈடுபாடுள்ள இவர் தமிழையும், தமிழரையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பியதுடன் சிறந்த சமூகசேவையாளராகவும் விளங்கினார். புரட்சிகரமான சிந்தனைகளையும் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்துரை முதலியாருக்கு 1934ம் ஆண்டு தை 14ல் பூராட நட்சத்திரத்தில் இரண்டாவது மகனாக பொன்னம்பலம் வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பித்தார். இவர் கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கினார். சிறந்த பேச்சு வன்மையுடன் திகழ்ந்ததை அவதானித்த ஒரேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் இவரை ஸ்கந்தா கல்லூரியில் சேர்த்துவிட்டார். அங்கே சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு உயரிய சிந்தனைகளோடு விளங்கியதால் உபஅதிபர் ஜீ. சுப்பிரமணியம், வித்துவான் ஆறுமுகம் ஆகியோரின் அளவு கடந்த பிரிய மாணவனாகத் திகழ்ந்தார்.

இவர் உயர்கல்வியைத் தொடரப் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். அங்கே சிறந்த மாணவத் தலைவனாகவும், சிறந்த கல்வியாளனாயும், சிறந்த பேச்சாளனாயும் சிறந்த விளையாட்டு வீரனாயும் திகழ்ந்தார்.

கல்லூரியிற் கற்கும் காலத்திலேயே அரசியல், பொருளாதார, சமதர்மக் கொள்கைகளில் ஈடுபாடுடையவராய் விளங்கினார். இவரின் தந்தையான சின்னத்துரை முதலியார் மூத்தமகனாக ஓங்கார வடிவேலு கதிர்காம முதலியாரைக் கல்வித்துறையிலும், இளைய மகனான பொன்னம்பலம் வன்னிய மாப்பாண கதிர்காம முதலியாரைச் சமூக சேவைத்துறையிலும் வளர விட்டார். இதனால் **மூத்தமகன்** கல்வி கற்று வர்த்தகத்துறையில்



*சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிய முதலியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளரானார். யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் முதல் வர்த்தகத்துறை விரிவுரையாளராய் விளங்கிய துடன், ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து அகில இலங்கையிலும் க.பொ.த (உயர்தர) வகுப்பில் வணிக பாடத்தினை தமிழ்மொழி மூலம் முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் எனும் பெருமைக்குரியவராகின்றார். சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் அவர் அதிபராயும் கடமையாற்றினார்.

**த**ம்பதியாராகிய முதலியார் சமூகசேவை, சமூகநலன் ஆகியவற்றிலேயே பெரிதும் ஆர்வம் காட்டினார். எனினும் சைவத்தையும் தமிழையும் அவர் கண்ணெனப் போற்றினார். உயரப்புலம் பழைய வளவுப் பிள்ளையார் இவரின் குலதெய்வமாயும், கோயில் இவரின் சொந்தக் கோயிலாயும் விளங்கியது. மேலும் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார், சீரணி நாகம்மாள், ஐயனார் கோயில் என்பனவும் இவரின் பரம்பரையினரால் வணங்கப்பட்டு வந்தன. இவரும் ஒரு சிவபக்தனாகவும், பிறவிச் சைவனாகவும் விளங்கினார்.

**ச**மூக சேவைகள் செய்ததன் காரணமாக இவர் 1967ல் மானிப்பாய் பட்டினசபை முதலாம் வட்டாரத்தின் அங்கத்தவராய் தெரிவு செய்யப்பட்டுப் பின் தலைவர் ஆனார்.

**தொ**ழிற்சங்கவாதியான இவர் தொழிலாளர் சங்கத் தலைவனாகவும் ஆனதால் இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவனாயும், கூட்டுறவுத் துறையில் திறம்படச் செயற்பட்டமையால் மானிப்பாய் கோயிற்பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினராயும், தமிழ்காங்கிரஸ் கட்சியின் செயலாளராயும் கடமை யாற்றினார்.

**இவர் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் ஊடாக அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஒன்றையும் தொழில் பிணக்கு மத்திய சபை ஒன்றையும் முதன்முதலில் உருவாக்கினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு மனிதர்களுடன்



Help Age நிறுவன அதிகாரிகளுடன்
அமரர் சி.பொ.வ.மா.க. முதலியார் உரையாடும் போது

## மூத்த பிரஜைக்கான சிறந்த தங்க விருதுகளுடன்



உயர்திரு. க. முதலியார் மற்றும் அவரது பாரியர்
திருமதி. மு. மங்கயற்கரசி ஆகியோர் தங்க விருதுடன்
(Golden Award)முதற் தமிழனாக காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ**வ்வாறு சமூகநலன், சமூகசேவை என்று ஓய்வின்றி உழைத்தார். இவரின் தாயார் இவருக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். தாயாரின் விருப்பத்திற்கு இணங்க மாவிட்டபுரும் இலங்கையினார் முதலியார் தோன்றலில் இரண்டாவது மகளாகிய மங்கையற்கரசியை திருமணம் செய்தார். அவரும் பெயருக்கேற்பவே மங்கையற்கு அரசியாய், அன்போடும், பண்போடும் இல்லறத்தை இனிதே நடாத்தத் துணைபுரிந்ததுடன், முதலியார் முன்னெடுக்கும் முயற்சிகள் அத்தனைக்கும் தோள் கொடுத்து உறுதுணையாக முன்னின்றுதவினார். முதலியார் திருமணம் செய்தாலும் சமூக சேவையைக் கைவிடவில்லை.

**அ**வர் ஒரு சிறந்த விசவாயியாய் விளங்கியதால் விவசாய மன்னனாகத் தெரிவு செய்யப்பட்டார். அதனால் விவசாயிகளின் தோழனும் ஆனார். இதனால் மறைந்த நவாலியூர் கிராம உத்தியோகத்தரான ஹேமலதாவின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் (HSCMF) இவருக்கு **விவசாயிகளின் தந்தை** என்ற சிறப்புப் பட்டத்தையும் விருதையும் வழங்கிக் கௌரவித்தார்.

**நா**ட்டினதும், மக்களினதும் நலன் பற்றிய சிந்தனையும் செயற்பாடும் என்றும் தணிந்ததில்லை. ஓய்ந்ததில்லை. அவர் வெற்றிகரமாக நிறைவேற்றிய சாதனைகள் பல.

1. **யாழ் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை முன்னாள் நீர்வழங்கல் சபை அமைச்சர் எ.எல்.எம் அதாவுல்லா அவர்களுக்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக அறிமுகப்படுத்தியதுடன் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரவும் செய்தார்.**
2. **குடிநீரின்றிக் கஷ்டப்படும் கட்டுடை நவாலி மக்களுக்குச் சுன்னாகத்திலிருந்து குழாய் மூலம் குடிநீர் வர ஆவன செய்தார்.**
3. **விவசாயக் காப்புறுதி செய்தவர்களுக்கு 9 மாதங்களாக விவசாய ஓய்வூதியம் வராமலிருந்ததை அறிந்து அவர் யாழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்ட தேசவளமை விவசாயிகள் சம்மேளனத் தலைவர் என்ற வகையில் மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்குக் கடிதம் அறிவித்ததுடன் அவர்களின் ஓய்வூதியத் தொகையை 1000 ரூபாவிலிருந்து 3000 ரூபாவாக் கூட்டவும் முன்மொழிந்தார்.**

**இ**த்தகைய சேவைகள் காரணமாக Help Age நிறுவனம் சிறந்த மூத்தபிரஜைக்கான தங்க விருதை (Golden Award) இவருக்கு வழங்கியது. அந்த விருது தமிழரான இவருக்கே கிடைத்தது என்பது பெருமைக்குரியது.

**மே**லும் இவருக்கு அரசினால் சமாதான நீதிவான் பட்டமும் வழங்கப்பட்டது. அதன் மூலமும் பலருக்குத் துணை புரிந்தார். இறுதிவரை இவர் முக்கிய கூட்டங்களில் கலந்துகொண்டார். விவசாயி ஒருவருக்கு இறப்பதற்கும் பத்துநிமிடம் முன்னராகவும் உரம் சம்பந்தமாய் கையெழுத்திட்டு பேசிக்கொண்டே இருந்தார். நாட்டின் நலனுக்கும் பலர் மக்களின் நல்வாழ்விற்கும் காலமெல்லாம் கைம்மாறு கருதாது தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமெனச் சேவை செய்த இவரின் இழப்பு அளப்பரியது. இவரின் மூத்த சகோதரரான சி.ஓ.வ.க.முதலியார் அவர்களும், சி.பொ.வ.மா.க. முதலியார் அவர்களும் இணைபிரியா நண்பர்களைப் போல் சிறுவயது தொடக்கம் வாழ்ந்தார்கள். இவர்கள் பள்ளிப்பருவத்தில் குதிரை வண்டியில் சேர்ந்து பாடசாலை செல்வதுடன் ஒரே நேரத்தில் திரும்புவது போலவே, ஒரே திகதியான 14இலும் மாதமான ஐப்பசியிலும், ஒரே திதியிலும் இறைபதமடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் சேவைகள் அவரைக் காலமெல்லாம் மாந்தர் நினைவிலும் மனங்களின் நினைவிலும் வாழவைக்கும்.


மகன்

ஓ. வ. க. முதலியார் செந்தூர்ச் செல்வன் (சுவிஸ்)

Email : selvanfr@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. திருமதி முதலியார் இளமைக் காலத்தில் - 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியான எனது வாழ்நாளில்........

எனது வாழ்வில் ஒளியேற்றியவர் அன்புக்குரிய கணவர் முதலியார் அவர்கள்.

அவர் என்னைக் கைப்பிடித்த நாள் முதல் இறக்கும் வரை என்னைவிட்டு ஒருநாளும் பிரிந்ததில்லை.

ஆனால் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதனை மையப்பொருளாகக் கொண்டு சேவையாற்றி வாழ்ந்தவர்.

அவர் எப்போதும் ஏதோ சிந்தித்துக் கொண்டே செயலாற்றிக் கொண்டு இருப்பார்.

விவசாயிகள், ஏழைகள் மற்றும் மக்களுக்கு உதவி செய்வதையே பெரும் சேவையாகக் கொண்டவர்.

இவரிடம் அம்மாவின் தாய்மை உள்ளத்தைக் கண்டேன், அப்பாவின் அறிவுரைகளைக் கேட்டேன். என் சகோதர சகோதரிகளின் அன்பைக் கண்டேன்.

எவரிடத்திலும் கோபப்படமாட்டார். எல்லோரையம் அன்புள்ளம் கொண்டே நேசித்தார். சிறியவர் முதல் பெரியவர் வரை மதிப்பளித்து வாழ்ந்தவர்.

இவரது வாழ்வும் - வளமும் ஏனையவரிடத்தில் இருந்து வேறுபட்டது.

தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்த உத்தமர். அவரது பிறப்பு, இறப்பு, இறந்த பின்னும் வாழ்கின்றதைக் காணமுடிகிறது. இனியும் தொடர்ந்து வாழும்.

இவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*திருமதி. மங்கையர்கரசி முதலியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சித்தப்பா

சீரும் சிறப்புமாய் நாம் வாழ
பக்க பலமாய் நீர் இருந்தீர்
பாரினில் பக்குவமாய் நாம் வாழ
பக்குவங்கள் பல சொன்னீர்

சித்தப்பாவே உமது சிறப்பு சொல்ல
எமது சிற்றறிவு போதாது
உமது நிலைகேட்டு
உருக்குலைந்து ஓடி வந்தோம்

கடல் கடந்து ஓடி வந்தோம் - உம்
திருமுகத்தை ஒருமுறை காணவென்று
காணாமல் போனதெம் காலமென்று
கதறுகிறோம்! கலங்குகிறோம்! வெதும்புகிறோம்!

அண்ணனும் தம்பியும் அகிலத்தில்
அன்பாக வாழ்ந்த உடன் பிறப்பென்று
உலகமறிய ஒக்டோபர் பதினான்கில்
ஒரே திதியில் விண்ணுலகம் சென்றீரோ

தெய்வத்துள் தெய்வமாய் - பலரை
வையகத்தில் வாழவைத்த நீர்
இறைவனோடு இரண்டறக் கலந்து
பேரின்பமுற இறைவனை வேண்டுகிறோம்.

*மறைவின் துயரில்.....*
*மகள் - செந்தூர்ச்செல்வி - சந்திரகுமார் (ஜேர்மன்)*
*மகன் - முதலியார் செந்தூர்செல்வன் - கௌரி (சுவிஸ்)*
*மகன் - முதலியார் செந்தூர்செழியன் - தர்சினி (கனடா)*
*மகன் - முதலியார் செந்தூர்வாசன் - சீத்தா (சுவிஸ்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனன், மைத்துனிகள் புலம்பல்

வாழ்வின் உயிர்ப் பொருளாய்
வசந்தத்தின் கருப்பொருளாய்
புவிதனில் வாழ்ந்த
பண்புடைய முதலியார் அத்தான் அவர்களே
ஆண்டுகள் 78 அவனியில் வாழ்ந்து
ஆழ்துயில் அரவணைக்க அன்னாரின்
ஆத்மா சாந்திக்காய்
ஆண்டவனைத் தொழுகிறோம்

வள்ளுவர் இல்லறத்தில் வழுவா நின்று
பண்புடையாள் மங்கையற்கரசியின் துணையாகி
எமது குடும்பத்தில் ஒன்றாகி
அன்புடையோன் எமது மைத்துனரே
தன்னம்பிக்கை எனும் மூலதனம் கொண்டு
தனக்குவரும் சவால்களை துணிவுடன் ஏற்று
முற்போக்கு எண்ணம் கொண்டு
உற்றார் உறவினர்களுடன்
அன்பு கொண்டு உறவாடி மகிழ்ந்து
அனைவரது அன்பைப் பெற்ற மா மனிதரே
ஆக்கமும் அழிவும் ஆண்டவன் கருத்தில்
தோற்றமும் முடிவும் தொடர்கதை தான் பூமியில்
மெய்யான அன்புதனை எல்லோருக்கும் வழங்கி
மேதினியில் மேன்மையுற வாழ்ந்த உத்தமரே
இறைவனை இறைஞ்சி வேண்டி
அஞ்சலி செலுத்துகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*மைத்துனன், மைத்துனிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය
அலுவலகம்
office
2669277
2690830

පොදු
பொது
General
2669269
2689360
2689361

ෆැක්ස්
பக்ஸ்
Fax
2669278

ඩග්ලස් දේවානන්දා පා.ම.
டக்ளஸ் தேவானந்தா பா.உ.
DOUGLAS DEVANANDA M.P.

නිවස
வதிவிடம்
Residence
2503467

Mobile 0777781891
E-Mail deva@slt.lk

ෆැක්ස්
பக்ஸ்
Fax
2585255

සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍ය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
MINISTER OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

ඔබේ අංකය/உங்கனது இல/ Your No :
මගේ අංකය/எனது இல/ My No :
දිනය/திகதி/ Date :
22.10.2012



# பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது செய்தி

யாழ் குடாநாட்டுக்கான ஏ - 9 தரைப்பாதை மூடப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில் யாழ் குடாநாட்டின் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, அன்றாட உணவிற்கே வழியின்றி பெரும்பாலான மக்கள் திக்குத் தெரியாதிருந்த ஒரு காலகட்டத்தில், ஏனைய துறைசார்ந்தோர் போன்றே விவசாய மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர். அச் சந்தர்ப்பத்தில் எமது மக்களினதும் விவசாயத்துறை சார்ந்தவர்களினதும் நலனை முன்னிறுத்தி, என்னால் நிதி வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்ட யாழ் மாவட்ட தேசவள விவசாயிகள் சங்கத்திற்கு தலைமை ஏற்று, அதனை முன்னடாத்துவதில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ள விவசாயத் திலகம் சி.பொ.வ.மா.க. முதலியார் அவர்களது இழப்பு என்னை மிகவும் வேதனை அடையச் செய்துள்ளது.

தனது 78 வருட வாழ்க்கையில் அமரர் முதலியார் அவர்கள், யாழ் மண்ணின் விவசாயத் துறைக்கும், விவசாய மக்களுக்கும் அளப்பரிய சேவையினை ஆற்றியுள்ளார் என்பதை நான் நன்கறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாக



பல சேவைகளை முன்னிறுத்தி மக்களை வாழவைத்து இறந்த பின்னும் வாழுகின்ற முதலியாரின்
இறுதிநாள் அஞ்சலி உரை வேலணை பிரதேச சபை செயலாளர் செ. ரமேஷ் தலைமையில்
இடம்பெற பேராசிரியர் க. சிவராசா உரையாற்றுகிறார். அருகில் பாரம்பரிய சிறுகைத் தொழில் முயற்சி
அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திட்டப் பணிப்பாளர் எந்திரி. தி. பாரதிதாசன் ஆகியோருடன்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், கட்டுடையில் பிறந்த அமரர் முதலியார் அவர்கள், விவசாய மக்களினதும், யாழ் விவசாயத்துறையினதும், பொதுமக்களினதும் நலன்கருதி அடிக்கடி என்னுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடுபவராக இருந்தவர். இப்பகுதி பொதுமக்களையும், விவசாய மக்களையும் அழைத்து வந்து பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைப்பார். இந்த வகையில் இவரது கோரிக்கைகளுக்கு அமைவாக கட்டுடை, நவாலிப் பகுதிக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தேன். விவசாயிகளின் ஓய்வூதியத்தை 1000 ரூபாவிலிருந்து 3000 ரூபாவரை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு முன்மொழிந்துள்ளேன். இத்தொகை அதிகரிக்கப்பட்டால் அதற்கான காரணகர்த்தாவாக அமரர் முதலியார் அவர்களே விளங்குவார். இதேபோன்று பல்வேறு பணிகளை என்மூலம் இவர் ஆற்றியிருப்பது இப்பகுதி மக்களுக்காக எனும்போது இவரது உழைப்பு மிகவும் மதிக்கத்தக்கதாகவுள்ளது.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் தனது மண்ணுக்கும், மக்களுக்கும் சேவையாற்றியுள்ள அன்னார், விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தோழன், பசுமையின் காவலன், விவசாயிகளின் தந்தை என்றெல்லாம் பட்டங்களைப் பெற்றிருப்பவர்.

அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்கள், விவசாய மக்கள் அனைவருடனும் எனது சோகங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா பா.உ.**
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
இணைத் தலைவர் - யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழு
Frk/Rn

780, මරදාන පාර, කොළඹ 10. 780, மருதானை வீதி, கொழும்பு 10 780,Maradana Rd, Colombo 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivamayam

# மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
# MAHADEVA ACHCHIRAMA CHILDREN HOME

**Reg No NEP/PCC/CH/132 Department of Social Service**

வங்கிக் கணக்கு இல 9991351 - இலங்கை வங்கி கிளிநொச்சி

**Bank A/c No 9991351 Bank of Ceylon Kilinochchi**

Puthumurippu,
Uruthirapuram,
Kilinochchi,
Srilanka.

புதுமுறிப்பு,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி,
இலங்கை.

**Patrons**
1. Ven. Kaneshanantha Mahadeva Suwamigal ( Chief Priest- Mahadeva Ashramam- Jeyanthinagar)
2. Mr. K. Sittampalam ( Professor- University of Jaffna)
3. Mrs. P. Jeyarani (Project Director, Kachcheri- Kilinochchi)

**Senior Consultant**
4. Dr. P. Kandasamy, Former Deputy Director, Ministry of Agriculture & Land,

**Executive Committee Members**
**Hon. President**
5. Mr.T.Rasanayagam Former Govt. Agent , Kilinochchi District

**Senior vice President**
6. Mr.S. Selvaradnam (Retried TO Paranthan Chemical Cooperation)

**Vice Presidents**
7. Mr.S.Mohanabavan (Director Planning-Kachcheri- Kilinochchi)
8. Mr. A. Nahendram (Retried Project Director)

**General Secretary**
9. Mr.Pon. Nithiyananthan (Former Special Commissioner , Karachchi)

**Assistant General Secretary**
10. Mr. B. Sathananthan (Management Assistant- EN Rep-Kachcheri-Kilinochchi)

**Treasurer**
11. Mr.S. Pathmasiri (Rural Development Officer, Kilinochchi)

**Members**
12. Mr. S. Tharmaratnam (Retried Provincial Director of Edu.)
13. Mr. S.Kanakaraththinam (Retried Principal)
14. Mr.S.Raththinasingam (Retried Officer Paranthan Chemical Cooperation)
15. Mrs. S.Janarththanan (Assistant Director of Planning)
16. Mr. N. Sivaneshan (Grama Servaka Officer)
17. Miss. R. Parasakthi (Management Assistant DS Office) Karaichchi)
18. Mr. K. Vairamuthu (Retried Deputy Director of Education)
19. Mr. S. Premkumar (Development Officer, Kachcheri)

26.10.2012

## ஏழை விவசாயிகளின் முதல்வனாய் ஏழைத் தொழிலாளிகளது தோழனாய் அயராத முயற்சியால் உயர்ந்து முதன்மை பெற்ற அமரர் சி.பொ.வ.மா.க.முதலியார்

யாழ்ப்பாணத்தில் நாவலர் என்று கூறும்பொழுது நல்லைநகர் தந்த நாவலரையே குறித்து நிற்கும். அதேபோல அண்மைக்கால யாழ்ப்பாண வரலாற்றில் முதலியார் என்று கூறினால் அது எங்களது சி.பொ.வ.மா.க முதலியார் அவர்களையே குறித்து நிற்கும். இவர் சமூகத்தையும் இயற்கைச் சூழலையும் வெகுவாக நேசித்தவர். தான் வாழ்ந்த காலத்தில் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழாமல் சமூகத்தை நேசித்து சமூகத்தின் கீழ் மட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்காகவும் ஏழை விவசாய மக்களது விடிவுக்காகவும் விசுவாசத்தோடும் அர்ப்பணிப்போடும் பாடுபட்ட பெருந்தகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மானிப்பாய் பட்டினசபையின் தலைவராக இருந்து தனது பட்டின மக்களுக்கு ஆற்றிய பன்முகப்பணி இன்றும் மக்களால் நன்றியுணர்வுடன் நினைவு கூரப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர்கள் ஒருகாலத்தில் பிரபலமாக இருந்தபோதும் இவர்கள் ஒன்றுபட்டு தங்கள் ஊதியத்தைக் கோரமுடியாது சுருட்டு முதலாளிகளுடைய தீவிர சுரண்டலுக்கு உட்பட்டு வாய்மூடி மௌனிகளாக இருந்தபோது அமரர் முதலியார் அவர்கள் சுருட்டுத் தொழிலாளருக்கு தலைமைத்துவம் கொடுத்து முதன் முதலாக தொழிற்சங்கத்தை உருவாக்கி அதனை அகில இலங்கை ரீதியாக பரவல்படுத்தி பலப்படுத்தி சுருட்டு முதலாளிகளுடைய சுரண்டலில் இருந்து விடுதலை பெற்றுக் கொடுக்கப் பாடுபட்டு அதனைப் பெற்றுக் கொடுத்தார். இதன்மூலம் சுருட்டுத் தொழிலாளர்கள் உரிய கூலியைப் பெறவும் கூலிகள் இதற்கு மேலாக இவர் தான் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு யாழ்ப்பாண விவசாய மக்களுக்கு முன்மாதிரியாகப் பெரும் பணியாற்றினார். இதன் காரணமாக இவர் அரசினாலும் விவசாய மக்கள் நிறுவனங்களினாலும் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் விவசாயிகளின் தந்தை என்றும் விவசாயிகளின் தோழன் என்றும் பசுமையின் காவலன் என்றும் பட்டம் வழங்கி இவரது மகத்தான சேவை பாராட்டப்பட்டது குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இவர் தனது மக்களுக்கு எங்கே என்ன பிரச்சினை ஏற்படுகின்றதோ அந்த இடத்தில் பிரசன்னமாகி அவற்றைத் தீர்ப்பதற்கு தனது ஆற்றல், ஆளுமை அனைத்தையும் பயன்படுத்தி தீர்த்து வைத்த ஒரு பெருமகன். இவர் மக்களின் காவலன். மனிதநேயம் மிக்க பல பணிகளில் தன்னையே உருக்கி ஊர் மக்களுக்கு உதவியவர்.

இவரது செயற்பாட்டை பல்வேறு வகையில் பார்க்க முடியும் தான் வாழ்ந்த காலமக்களது உயர் வாழ்வுக்காகவும் தான் வாழ்ந்த சூழல் துரித அபிவிருத்தி என்ற மாயைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கி இயற்கை அழிய விடாது இயற்கையோடியைந்த அபிவிருத்தியை நேசித்த சமூகவியலாளன்.

இவரது இழப்பு இவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல எமது தேசத்துக்கே பாரிய இழப்பாகும். இவரது இழப்பினைத் தாங்கமுடியாது துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவரது துணைவியார், உற்றார், உறவினர்க்கும் எமது இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலியார் ஐயா அவர்களுடைய ஆத்மா உருத்திரபுரீசுவரன் பாதத்தில் அமர்ந்து நித்திய வாழ்வு பெற உருத்திரபுரீசுவரனை இறைஞ்சுகின்றேன்.

*தி. இராசநாயகம்*
*தலைவர்*
*மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம்*
*ஜெயந்திநகர், கிளிநொச்சி*
*முன்னைநாள் அரச அதிபர் - கிளிநொச்சி*
*முன்னைநாள் பிரதிப்பிரதம செயலாளர் - பொதுநிருவாக அமைச்சு, வடக்கு மாகாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 24.10.2012

# அரசாங்க அதிபரின் இரங்கற் செய்தி

பல அறிஞர்களை ஈன்ற கட்டுடை, மானிப்பாயில் காசின் போற்ற வாழ்வாங்கு வாழ்ந்து, 14.10.2012 இல் இறைவனடி சேர்ந்த அமரர் சி.பொ.வ.மா.க. முதலியார் அவர்களின் பிரிவு அவரது குடும்பத்திற்கும், உறவுகளுக்கும் மட்டுமல்லாது விவசாயச் சமூகத்திற்கே பேரிழப்பாகும்.

ஒரு மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத வொன்றாக விளங்கும் விவசாயத துறையில் நீண்டகால அனுபவமும், ஆற்றலும் கொண்ட இவர், மற்றவர்களுக்குச் சேவை செய்வதே ஆனந்தம் எனக்கொண்டு பொதுநலத்தில் அக்கறையுள்ளவராகத் திகழ்ந்து விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தோழன், விவசாயிகளின் தந்தை, பசுமையின் காவலன் எனப் பல பட்டங்களைப் பெற்றது மட்டுமல்லமல், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தினை வினைத்திறனாக்கியமை, சுன்னாகத்தில் இருந்து நவாலிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வரவழைத்தமை, விவசாயிகளின் ஓய்வூதியத் தொகையினை சிறந்த பிரஜைகளுக்கான தங்க விருதினைப் பெற்ற முதல் தமிழனாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தமை, அகில இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியமை போன்ற பல்வேறு நிலைகளில் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு சமூகத்தில் உன்னத் நிலையில் அமரத்துவமான இவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரது வாழ்க்கைக் காலத்தில் ஆற்றிய மகத்தான பணிகள் என்றென்றும் அவர் பெயர் சொல்லி நிற்கும் என்று கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சு.அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

## முதலியார் ஞாபகார்த்த அறக்கட்டளை நிதியம்

மறைந்த சி.பொ.வ.மா.க. முதலியார் ஞாபகார்த்தமாக முதலியார் அறக்கட்டளை நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக சுவிஸ் எழுத்தாளர் செந்தூர்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலி. தென்மேற்கில் விவசாயிகளின் பிள்ளைகள், வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிள்ளைகளின் கல்வி, முன்பள்ளிகள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு உதவ இந்த நிறுவனம் முன்வரும் என்று கூறப்பட்டது.

இதன் செயலாளராக திருமதி. மங்கையர்க்கரசி நியமிக்கப் பட்டுள்ளார்.

*(உதயன், ஒக்டோபர், 10, 2012)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக் கூட்டணி
දෙමළ එක්සත් විමුක්ති පෙරමුණ
TAMIL UNITED LIBERATION FRONT

Tel/Fax : (+94) 21 222 3631
(+94) 21 320 7500
Mobile : (+94) 777890171

'Thanthai Selva Akam',
57/48, Stanley Road,
Jaffna, Sri Lanka.

## மறக்க முடியாத மாமனிதர்
## அமரர் சி. பொ. வ. மா. க. முதலியார்

அமரர் சின்னத்துரை பொன்னம்பலம் வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார் அவர்கள் தம்முடன் பழகிய மக்களின் உள்ளங்களில் உறைந்திருப்பவர் மட்டுமல்ல, மறக்க முடியாதவரும் கூட. மக்கள் தொண்டர்களாக அவரும் நானும் செயற்பட்டு, மானிப்பாய் கிராமசபை, பட்டணசபை, ஆகியவற்றின் தலைவராக அன்னாரும், கரைச்சி கிராமசபை, கிளிநொச்சி பட்டணசபை ஆகியவற்றின் தலைவராக நானும் செயற்பட்டோம். அக்காலகட்டத்தில் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களும் எம் இருவரிலும் மிக்க பாசத்துடன் செயற்பட்டார். அன்னாரின் வேகத்தில் என்னால் செயற்பட முடியவில்லை. முதலியார் அவர்களின் சாதனைகளே பல. ஓடி ஓடி மக்களுக்காக உழைத்தார்.

எனக்குத் தெரிந்த வகையில் அமரர் முதலியார் அவர்கள் சுருட்டுத் தொழிலாளர்களுக்காக மிகக் கடுமையாக உழைத்தார். அதே பணியை யாழ் மாநகர சபை உறுப்பினர் அமரர் துரைராஜசிங்கம் அவர்களும் செய்து வந்தார். சுருட்டு தொழிலாளர் சங்கங்கள் மூலமாக அகில இலங்கை சுருட்டு தொழிலாளர் சங்கத்தையும் உருவாக்கி தனது உழைப்பால் சுருட்டு தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முதல் முதலாக தொழில் பிணக்கு மத்தியசபை இவராலேயே உருவாக்கப்பெற்றது. அன்றைய நிலையில் இதுவொரு பெரிய சாதனையாகும். ஏனெனில் தென்னிலங்கை வாழ் சகோதர இனத்தவர்களும் யாழ்ப்பாண சுருட்டு என்றால் மிகவும் மகிழ்ச்சியுடன் புகைப்பர். முன்பு ஒரு தடவை பிரதம அமைச்சராக இருந்த டபிள்யு. தகநாயக்க அவர்கள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் எனது தந்தையாருடன் ஒன்றாகப் படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எனது தந்தையாரின் பெட்டியைத் திறந்து சுருட்டுத் திருடிக் கொண்டதாகப் பகிரங்கமாக கூட்டங்களில் கூட பேசுவார். தெற்கே யாழ்ப்பாண சுருட்டுக் கடை இல்லாத கிராமமோ பட்டணமோ கிடையாது. கிராமம் தோறும் அது ஒரு கைத்தொழில். சுருட்டு சுற்றும் தொழிலே பெரும்பாலானோருக்கு ஜீவாதாரம். சிறுவர்கள் தொழில் ரீதியாக சுரண்டப்பட்டார்கள். இவர்களுக்கு விமோசனம் அளித்தவர் முதலியார் அவர்களே.

இதே போலவே விவசாயத்துறையிலும் அவர்களின் நலம்பேண உழைத்தமையால் அவருக்குக் கிடைத்த பட்டங்கள் ஒன்றா இரண்டா? விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தோழன், பசுமையின் காவலன், விவசாயிகளின் தந்தை என பல அடுக்கிக்கொண்டே போகலாம். சமாதான நீதவான் பதவியோடு மத்தியஸ்தர் பதவி அவரின் சேவைக்கு மெருகூட்டின. யாழ் மக்களின் குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதில் மிக்க ஆர்வம் காட்டி இரணைமடு நீரை யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீராக வழங்க வேண்டும் எனப் பாடுபட்டார். சுன்னாகத்திலிருந்து கட்டுடை, நவாலி ஆகிய பகுதிகளுக்கு குழாய்நீர் வர காரணியாக இருந்தவரும் முதலியார் அவர்களே. விவசாயிகளின் ஓய்வூதியத்தை ரூபா 3000 ஆக உயர்த்த முன்மொழிந்தவரும் அவரே. சிறந்த பிரஜைகளுக்கான தங்கவிருது கிடைத்த முதல் தமிழர் என்ற பெயரையும் தனதாக்கிக் கொண்டவரும் அவரே.

அமரர் முதலியார் அவர்கள் எனது ஏறக்குறைய அரை நூற்றாண்டு நண்பர். அவரின் பிரிவு என்னை நிறையவே பாதித்துள்ளது. ஏனெனில் நான் அவரிலும் மூத்தவன். அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு, அவரை இழந்து தவிக்கும் உற்றார், உறவினர், மனைவி, பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பைத்தந்த இறைவனுக்கு எனது நன்றிகள்.

வீ. ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

மாவை. சேனாதிராசா
பா. உ., யாழ்ப்பாணம்.
23.10.2012

# நீங்கா நினைவுகளில் என்றும் நிலைத்திருப்பவர் சி.பொ.வ.மா.க முதலியார்

அன்புக்கும் பண்புக்கும் மனிதத்திற்கும் உரித்தான முதலியார் என்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி எம்மிடம் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது. அவர் பிரிந்து சென்று விட்டாலும் எமது மனங்களில் நிறைந்த மனிதராக விளங்குகிறார். அன்னார் இறுதி நிகழ்வில் பங்கு கொள்ள முடியாமற் போனமை நெஞ்சில் ஆதங்கமாயிருக்கிறது.

மானிப்பாய் என்றால் முதலியார் முன்னணியில் இருப்பார். இன்று கிளிநொச்சி இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிநீர் கொண்டுவர நடைபெறும் முயற்சிகளில் முதலியாருக்கும் முக்கியத்துவமுண்டு. அன்று நவாலிக்குக் குடிதண்ணீர் கொண்டுவர முதலியாரே முன்னின்றுழைத்தார்.

முதலியார் விவசாயிகளின் விளக்காய் திகழ்ந்தவர். தொழிலாளர்களின் தலைவனாய் மக்களின் உத்தமத் தொண்டனாய் ஊருக்கு ஒளிதரும் கலங்கரை விளக்காய் விளங்கியவர் விவசாயிகளின் தந்தையாய், தோழனாய், காவலனாய் ஏன் மன்னன் என்றெல்லாம் பல பட்டங்களைப் பெற்றுப் புகழோடு துலங்கியவர் முதலியார்.

**என் இளமைக்காலமுதல் முதலியாரை அறிந்திருக்கிறேன். அன்புடனும் பண்புடனும் பழகும் பண்பாளன். எல்லோர் மனதிலும் பதிந்த ஒரு தொண்டனாய் தலைவனாய் திகழ்கிறார். அரசியலில் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் எல்லோரும் அன்னாரை அன்புடன் முதலியார் என்று ஒரு தலைவனாய் பார்த்து மதித்து வந்தனர். அத்தனை மதிப்புமிக்கப் பெரியார், நல்ல மனிதன் மக்களிடம் என்றும் "முதலியார்" எனும் மாமனிதராய், வாழ்க முதலியார் பெருமை என என் இதயத்தால் சொல்லி நிற்கின்றேன்.**

*மாவை. சேனாதிராசா பா. உ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் தோழன் தேசகீர்த்தி சி.பொ.வ.மா.க.முதலியாரும் (சமாதான நீதவான்) யாழ் கிளிநொச்சி நீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டமும்.....

யாழ்ப்பாணத்தின் கட்டுடைப் பிரதேசத்தில் பிறந்த இவரை எனது சிறுவயது முதற்கொண்டு எனக்கு நன்கு தெரியும், இவர் விவசாயிகளுக்காகவே தனது வாழ்நாளினை அர்ப்பணித்த ஒரு சேவையாளர்.

இவர் தனது சிறுவயது முதல் வயோதிபக் காலம் வரையிலும் தன்னலம் பாராது தனது சேவையினை வழங்கி வந்துள்ளமையினை அனைத்து சண்டிலிப்பாய் பிரதேசத்து மக்களும் நன்கு அறிவார்கள். தனது சொந்த செலவில் எரிபொருளினை முச்சக்கர வண்டிக்கு நிரப்பி மானியம் பெறத் தவறிய விவசாயிகளுக்கு தெரியப் படுத்தி உரங்களினை வழங்க ஏற்பாடு செய்ததனை எவரும் மறக்க மாட்டார்கள். அத்துடன் கூட்டங்களுக்கு அழைத்து வருதல் போன்ற செயற்பாடுகளில் முன்னிற்பவர்.

இவர் குடாநாட்டு மக்களுக்கும் குறிப்பாக கட்டுடை மற்றும் நவாலி பிரதேசங்களிலுள்ள குடிநீர்ப் பிரச்சனையினை மாண்புமிகு அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு முன்னாள் அமைச்சர் கௌரவ எ. எல். எம். அதாவுல்லா மற்றும் தற்போதய அமைச்சர் கௌரவ டினேஸ் குணவர்த்தன ஆகியோரின் கவனத்திற்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தியவர். அதேபோன்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அடிக்கடி தனது பாரம்பரிய உடைகளுடன் புன்முறுவல் பூத்த முகத்துடன் அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்துபவர்.

யாழ் - கிளிநொச்சி நீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டப் பணிமனை திறப்பு விழாவின் போது பங்கு பற்றி சிறப்பித்தமையும் எமது நினைவில் என்றும் பசுமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் - கிளிநொச்சி நீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டப் பணிமனை திறப்பு விழாவின் போது....



கட்டுடை மற்றும் நவாலி நீர் விநியோக ஆரம்ப விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வழங்கல் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் போது
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மற்றும் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதியுடன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.07.2012ம் திகதியன்று நவாலிப் பிரதேசத்தில் சமுக மட்டப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தேவாரம் பாடி கூட்டத்தினை தனது ஆசியுரையுடன் ஆரம்பித்து வைத்ததனை விவசாயிகள் எவரும் மறக்க மாட்டார்கள்.

இவர் சுன்னாகத்தில் இருந்து கட்டுடை நவாலிக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் வரவழைத்தமை மற்றும் விவசாயிகளின் ஓய்வூதியத்தை ரூபா 1000/= வில் இருந்து 3000/= ரூபாவாக கொண்டு வருவதற்கு முன்மொழிந்தமை போன்றவற்றினை இப்பிரதேசத்து மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

சண்டிலிப்பாய் மக்களின் தேவைகளுக்காக அனைத்து தரப்பினருக்கும் மகஜர் எழுதுவதற்கு உதவி செய்பவர்.

இவரது அளப்பரிய சமூக சேவைகளுக்காக விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தோழன், விவசாயிகளின் தந்தை, பசுமையின் காவலன் மற்றும் மத்தியஸ்தர் நீதவான் போன்ற பதவி பட்டங்களை பெற்றிருந்தார். அத்துடன், Help Age நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சிறந்த மூத்த பிரஜைக்கான தங்க விருதினைப் பெற்றார்.

**அமரர் சி.பொ.வ.மா.க. முதலியாரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி யாழ் மாவட்ட விவசாயத்திற்கே ஏற்பட்ட ஒரு பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.**

*எந்திரி.தி.பாரதிதாசன்*
*திட்டப்பணிப்பாளர்.*
*யாழ்- கிளிநொச்சி நீர் விநியோகம் மற்றும்*
*சுகாதாரத் திட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பிரிவு
වාරිමාර්ග ඉංජිනේරු කාර්යාලය යාපනය කොට්ඨාශය
OFFICE OF THE IRRIGATION ENGINEER – JAFFNA DIVISION
பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | පන්නෙ පාර යාපනය | Pannai Road, Jaffna.
Tel.: 021-2222288 | Fax: 021- 2222288 | e-mail: irrigationjaffna@yahoo.com

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்......

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

என்பது வள்ளுவன் வாக்கு. இவ் வாக்கிற்கமைய வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்களில் அமரர் சி.பொ.வ.மா.க. முதலியார் அவர்களும் ஒருவராவார்.

வலி. தென்மேற்கின் மானிப்பாய், கட்டுடைப்பிரதேசத்தில் பிறந்து, வாழ்ந்து சமய சமூகப் பணிகளை ஆற்றிவந்த அமரர் முதலியார் அவர்கள் மறைந்தும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றால் அவர் ஆற்றிய சேவைகளே அதற்குக் காரணமாய் இருக்கின்றன.


விவசாயிகளின் தோழனாக, விவசாயிகளின் மன்னனாகத் திகழ்ந்துள்ள அமரர் அவர்கள் எமது திணைக்களம் சார் செயற்பாடுகளுக்கு தன்னாலான ஒத்துழைப்பை வழங்கி வந்ததோடு தேவையான சந்தர்ப்பங்களில் தனது அனுபவரீதியான தகவல்களினூடாக எமக்கு உறுதுணையாக நின்ற ஒருவராகக் காணப்படுகின்றார்.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவராகச் சேவையாற்றிய அமரர் முதலியார் அவர்கள் யாழ். மாவட்டத்தின் வலிகாமத்தின் மத்திய பிரதேசத்தினூடாகச் செல்வதும் விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாய்க் கிடைத்ததுமான வழுக்கையாற்றுத் திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதோடு மட்டுமல்லாது தன்னுடைய பிரதேசத்திற்குட்பட்டிருக்கும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே நன்னீரைக் கண்டிராத கட்டுடை - நவாலிக்கு மாண்புமிகு
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பேருதவியுடன் சுன்னாகத்திலிருந்து
கட்டுடை ஊடாக நவாலிக்கு குடிநீரை வழங்க பெரிதும் பாடுபட்டு உழைத்த முதலியாரை
என்றும் மறக்க முடியாத நினைவாக - மக்கள்




பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முதலியாரின் பாரியார் மங்கள விளக்கேற்றி
முன்பள்ளி நிகழ்வை அலங்கரிக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையானதும் பாதுகாக்கப்பட வேண்டியருமான "இடி குண்டு" நீர்த்தேக்கத்தைப் புனரமைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரூடாகவும் முயற்சிகளை மேற்கொண்ட ஓர் சமூக ஆர்வலருமாவார். மேலும் கல்லுண்டாய் மீன்பிடித்துறைக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஒரு பாதை அமைக்க வேண்டும் என்று எண்ணி அதை நடைமுறைப்படுத்துமாறு ஊடகங்கள் வாயிலாகவும், அரச அலுவலங்களினூடாக முயற்சித்தவரும் அமரர் முதலியாரே.

இவ்வாறு சமூக முன்னேற்றத்தையும், விவசாயத்தினூடாக பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் உயரிய சிந்தனையையும் கொண்ட அமரர் முதலியார் அவர்களது உணர்வை அறிந்துகொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அமரரை அழைத்து கௌரவம் வழங்கியமை இவரது சேவையின் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது. இத்தனை சிறப்பு மிக்க நல்ல விவசாயியை, சமூக சேவையாளனை நல்ல மனிதனை எமது பிரதேசம் இழந்து நிற்பது மிகவும் வேதனையானதே.

ஆனாலும் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒரு நாள் இறப்பதென்பது நியதி என்ற நிலையை மனதில் வைத்து ஆறுதல் கொள்வதுடன், அமரரது சேவையை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும்.

**எந்திரி க.கருணாநிதி,**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களில் முதலியார் ஐயா

## விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மண்ணெண்ணெய் மானியம் வழங்கவேண்டும்

### விவசாய சம்மேளனத் தலைவர் தி.போ.வ.ம.க முதலியார்

(யாழ்.மத்தி நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் 15 கமநல சேவைகள் உள்ளடங்கலாக எண்ணாயிரம் முழு வேலைகள் விவசாயிகள் பல்வேறுபட்ட விவசாயத் தொழில்களில் ஈடுபடுகின்ற போதிலும், மிக வறியவர்களாகவே உள்ளனர்.

இந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக மண்ணெண்ணெய் மானியங்களை வழங்கி உதவ வேண்டும். இவ்வாறு கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ். மாவட்ட தேசவள விவசாய சம்மேளனத் தலைவர் தி.போ.வ.ம.க முதலியார் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் 248 விவசாயிகள் சம்மேளனத்தைச் சேர்ந்த பன்னிரெண்டாயிரம் முழுநேர விவசாயிகளில் முதற்கட்டமாக எண்ணாயிரம் விவசாயிகளுக்கு இந்த மண்ணெண்ணெய் நிவாரணத்தை வழங்கி உதவவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதில் கலந்துகொண்ட வலி. மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் பேசுகையில்,

திவிநெகும திட்டத்தில் வடக்கு விவசாயிகளுக்கு உதவுவதற்கு மாவட்ட மட்டத்தில் ஏற்கெனவே முன்மொழியப்பட்ட திட்டங்கள் செயற்படவில்லை.

இவ்வாறான செயற்றிட்டங்கள் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டிருந்தால் விவசாயிகளின் வறுமை ஓரளவு குறைக்கப்பட்டிருக்கும்.

மேலும் அரசிடம் விவசாயிகளுக்கு உதவுவதற்கான சரியான திட்டங்கள் எதுவும் தற்போது இல்லை. ஆனால், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய அரசாங்க அதிபர்கள் முன்மொழிவுப் பத்திரங்களை ஏனைய உதவி வழங்குகின்ற அரசசார்பற்ற சர்வதேச நிறுவனங்களுக்கு முன்வைத்து சில திட்டங்களை முன்வைப்பதன் ஊடாக முழு வறுமையையும் குறைக்கலாம் என வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த. நடனேந்திரன் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



விவசாயிகளின் தந்தை **முதலியார்**

இறையடி சேர்ந்தார்

**விவசாயிகளின் தோழன் தேசகீர்த்தி**

**க. முதலியார் (Father of Agrarian)**

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

வேலணை பிரதேசசபை (சி/4159)(8-14) செ. ரமேஷ், செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சம்மேளனத் தலைவர் முதலியாருக்கு எமது அஞ்சலிகள்



யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத் தலைவர்-
தேசகீர்த்தி - விவசாயிகளின் தோழன் - விவசாயிகளின் தந்தை -

## உயர்திரு. சி.பொ.வ.மா.க.முதலியார் (ச.நீ.)

அவர்களின் திடீர் மறைவுகேட்டு அதிர்ச்சி உற்றுள்ளோம்.
சம்மேளனத்தின் தலைவராக இருந்து வடபகுதி விவசாய மக்களுக்கு இலவசமாகப் பொருள்கள் பெற்று விநியோகித்து, தன்னாலான சேவைகளை மன முவந்து அளித்த பெருந்தகையாளன். மேலும் புன்னாலைக் கட்டுவனில் விவசாயிகளுக்கான களஞ்சியம் (Stores) அமைத்து சேவை செய்து வந்த மணிமகுடம் முதலியார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தேசவள விவசாயிகள் சம்மேளன**
**நிர்வாகிகள், ஊழியர்கள்.**
**யாழ்.மாவட்டம்.**

(சி/4172)(2.6.7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் தந்தை முதலியாருக்கு இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்



தேசகீர்த்தி-விவசாயிகளின் தோழன்-
விவசாயிகளின் தந்தை
*சி.பொ.வ.மா.க.முதலியார் (ச.நீ)* -தலைவர்-
மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின்
தலைவர் அவர்களின் மரணச்செய்திகேட்டு
அதிர்ச்சியடைந்துள்ளோம். மானிப்பாய் மேற்கு
விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவராக
மட்டுமன்றி வடக்கின் விவசாயிகளின் நலனுக்காக
அல்லும் பகலும் அயராது உழைத்த பெருந்தகையாளன்
முதலியாரை இழந்துள்ளோம். அவரது சேவை இறந்த பின்பும்
வாழும் என்ற வாக்கிற்கிணங்க வணங்கி ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

*மானிப்பாய் மேற்கு,*
*விவசாயிகள் சம்மேளன*
*நிர்வாகிகள், உறுப்பினர்கள்.*

*மானிப்பாய்.*

(சி/4190) (15-14)

# கண்ணீர் அஞ்சலி



## முதலியார் (ச.நீ)

கட்டுடை மானிப்பாயூர் தேசகீர்த்தி - விவசாயிகளின் தந்தை சி.பொ.வ.மா.க. முதலியார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம்.

முதலியார் அவர்களின் பன்முகப்பார்வையின் கீழ் யாழ். கிளிநொச்சி குடி தண்ணிர் திட்டம், கட்டுடை - நவாலி குடி தண்ணீர் திட்டம் மற்றும் பல அபிவிருத்திகளுக்கு முன்னோடியாக உழைத்து அபிவிருத்திக்கு வித்திட்டவர்.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**எந்திரி தி. பாரதிதாசன்**
**திட்டப்பணிப்பாளர்**
**NWSDB- ஊழியர்களும்**

**JKWSSP**
**யாழ். மாவட்டம்.**

(சி/1558)(8-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக தனிமனிதனாக நின்று உழைத்தவர் முதலியார்

**பேராசிரியர் சிவராசா**

யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்காக மட்டுமன்றி தீவு தழுவிய ரீதியிலும் தனிமனிதனாக நின்று விவசாயிகளின் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தவர் முதலியார்.

நாடு தழுவிய ரீதியில் 98 ஆயிரம் விவசாயிகளுக்கும் மூவாயிரம் ரூபா அடிப்படை ஓய்வூதிய வேதனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இருவாரங்களுக்கு முன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டுவந்து மக்கள் பணியிலேயே தம்மை இறுதிவரை இணைத்துக்கொண்டவர்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகு இணைப்பாளரும் சிரேஷ்ட வணிகவியல் விரிவுரையாளருமான பேராசிரியர் கந்தையா சிவராசா தெரிவித்துள்ளார்.

அமரர் சி.பொ.வ.மா.க. முதலியாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு இரங்கல் உரையாற்றும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை பிரதேசசபைச் செயலாளர் செ. ரமேஷ் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்;

இறுதிமூச்சுவரை கிராம அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி ஆகிய முப்பணிகளிலும் ஆன்மீக செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தி மக்கள் பணி செய்த பெரும் தொண்டர்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இவரும் இவரது தந்தையும் மக்கள் பணியிலேயே தம்மை இறுதிவரை ஈடுபடுத்தி சேவையாற்றி வந்தவர்கள்.

இவ் இறுதி அஞ்சலி நிகழ்வில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை முன்னாள் வடமாகாண உதவி பொது முகாமையாளரும் யாழ் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி. பாரதிதாசன், மானியூர் பசுமைப் புரட்சியாளர் வை. செகராஜசிங்கம், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம. பற்றிக் நிறைஞ்சன், மானிப்பாய் பிரதேசசபைத் தவிசாளர் அ. ஜெபநேசன் உட்பட பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(20.10.2012 வீரகேசரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதின் மன்னவன் நீரே!

மக்களுக்காய்ப் பிறந்து மக்களுக்காகவே வாழ்ந்து
மண்ணை நம்பி வாழும் மானிடரை வாழவைக்கவே
மனமுவந்தே பணிசெய்தீர் மானிமேற்கிலே
மனத்திடை உமை வைத்திட்டே உள்ளம் மகிழ்ந்திருந்தோமே.

ஆற்றிய சேவைகள் அளப்பரிய ஆற்றுகைகள்
போற்றிடும் விவசாயியின் பொன்மனங்குளிர்ந்திடவே
சாற்றிடும் சாதனைகளை நிகரிலாச் செய்தே
போற்றிட எம்மனத்தே நிலையாய் நிலைத்தீரே

உழுதுண்டு வாழும் உழவர்க்கு நீரே தந்தையும் ஆனீர்
உற்ற பொழுதில் உற்றவர்க்கு உதவும் உத்தமனும் ஆனீர்
கற்றவர் கருத்தில் கொள்ளும் கண்ணியவானும் ஆனீர்
களிநகை கதை பல சொல்லும் காவிய நாயகனும் ஆனீர்

பார் போற்றும் விவசாயியின் மன்னனும் நீரே
பல் பயிர் உற்பத்தியாளனின் தோழனும் நீரே
பயிர் கொண்ட பாரின் பசுமைக்காவலனும் நீரே
பலர் கொண்ட சபையின் சமாதான நீதவானும் நீரே

புவியினுக்கு நீர் ஓர் முன்னுதாரணம் ஐயா
புன்னகையால் எம்மனதை கொள்ளை கொண்டீரும் ஐயா
புரியாத நேரத்தில் புதிரான கதையாய்
புத்தகமாய் புவிதனில் போனதும் ஏனோ ஐயா

சாதனை பல செய்து சாத்வீகனாய்
சாதல் என்பதை மறந்து சாதனை தொடர்ந்தீர்
விதிதனை முடித்து விண்ணுலகிற்கே அழைத்தான்
விறல் வேங்கையின் தோல் உடையான் பதம் சேரவே.

*அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்*
*தலைவர்,*
*வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,*
*மானிப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக – முதலியார்



லங்கா திறன் அபிவிருத்தி கல்வி நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ். செந்திலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திரு. சி.வொ.வ.மா.க. முதலியார், திருமதி. மு. மங்கையற்கரசி ஆகியோர் பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பதனையும் அருகில் வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினரும் தொழில்நுட்ப குழு தலைவருமான த. நடனேந்திரன் சிறப்பு அதிதியாக கலந்து கொள்வதனையும் படத்தில் காணலாம்.

## சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய திறப்பு விழாவில்



யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உயர்திரு. க. சுந்தரேசன் புதிய கமநல சேவைகள் (சண்டிலிப்பாய்) நிலையத்தை திறப்பதற்காக சி.வொ.வ.மா.க முதலியார் (ச.நீ) அவர்களை சிறப்பு விருந்தினராக அழைத்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

## சி.பொ.வ.மா.க.முதலியார் (சமாதான நீதவான்)

இவர் வாழும் காலத்தில் மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் மக்களின் தொண்டனாகவும் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் மானிப்பாய் பிரதேச வாழ் மக்கள் எல்லோருடையமனதையும் கவர்ந்து அவர்களது நெஞ்சங்களில் ஓர் நிலையான இடத்தைப் பிடித்திருந்தார்.

அவர் வாழும் காலத்தில் தன்னுடைய துணைவியார் மங்கையற்கரசியுடன் இனிய இல்லறத்தில் ஈடுபட்டு நல்லறங்கள் பல செய்துகொண்டு மானிப்பாய்த் தொகுதி மக்களுக்கு அரசியல், கலை, கல்வி, கலாசாரம், சமூகசேவைகள் புரிந்து வந்தார். அவருக்கு எத்தனையோ கௌரவ பட்டங்கள் இருந்தாலும் அதற்கெல்லாம் மேலாக மானிப்பாய் கட்டுடைப்பகுதியில் ஒரு முடிசூடா மன்னன் என்றே கூறலாம்.

வெள்ளையர்களின் ஆட்சிக்காலத்தில் இருந்து அந்தக் காலத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ மதப்புரட்சிகளுக்கு எல்லாம் அவரது தந்தை அவரது சகோதரர்கள் மற்றும் அவர் முதலியார் பரம்பரையாகவே இருந்து சைவசமயத்தை வளர்த்த பெரும் குடிமகன் முதலியார் குடும்பம் என்றால் மிகையாகாது. சமயத் தொண்டுகளும், சமூகத் தொண்டுகளும் இவருடன் கூடப் பிறந்தவை. அதை ஐதார்த்தமாக தங்களுக்கென்று ஒரு கோவில், அங்கே அவ் ஊர் பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப ஆனைக்கோட்டையில் பழையவளவு பிள்ளையார் கோவிலைக் கட்டி பாரம்பரியமாக சைவ சமயத்தையும் ஆனைக்கோட்டை மக்களையும் இணைத்து வந்தவர்கள் என்றால் மிகையாகாது.

ஏனென்றால் முதலியார் நினைத்திருந்தால் அரசாங்க பதவிகளை ஏற்ற தன்னையும் தங்கள் குடும்பத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தியிருக்கலாம். ஆனால் என்றுமே அவர் குடும்பம் சாதாரணமாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். நான் அறிந்த வரையில் முதலியார் எந்த விடயத்தை எடுத்தாலும் அரசியல் என்றால் என்ன மக்கள் அபிவிருத்தி என்றால் என்ன, ஆனைக்கோட்டை, மானிப்பாய் மக்களின் விருப்பத்திற்கேற்பவே அவர் செயற்பாடு அமைந்திருந்தது. இன்னொரு வகையில் சொன்னால் அவர் அரசியலில் ஈடுபடும் காலங்களில் எந்தக்கட்சியில் அவர் வேட்பாளராக நின்றாலும் மானிப்பாய்த் தொகுதியில் அவர் வெற்றியீட்டினார். மானிப்பாய்த் தொகுதி மக்கள் முதலியாரை பார்த்தார்களேதவிர அரசியல் கட்சிகளைப் பார்க்கவில்லை.

இதனால் மக்கள் மனங்கவர்ந்த நாயகனாக ஒரு முடிசூடாமன்னனாக அவர் என்றும் இருந்து வருகிறார். இன்று அவரை இழந்து நிற்கும் இவரது துணைவியார், பெறாமக்கள் மற்றும் சுற்றத்தார், ஊரவர்கள் தந்தையில்லாத குடும்பம் போல, மன்னன் இல்லாத ஆட்சி போல, மாலுமி இல்லாத கப்பல் போல தடுமாறி தவிர்ப்பதை நான் நேரிலே பார்த்தேன். அவர் தனது வாழ்க்கையில் எத்தனை முதலியாரை உருவாக்கியிருந்தாலும் அவரிடம் இருந்த கண்டிப்பும், புன்சிரிப்பும் எந்த முதலியார் இடத்திலும் காணமுடியாது என்பது உறுதி.

> "பார்த்தால் இரண்டு கால் வீடு பரமர் இருந்து குடி போன வீடு
> சோற்றால் எடுத்த சரீரம் சொல்லாமல் போகும் இந்த சிவம்"

என்ற பட்டினத்தாரின் வசனங்களை ஞாபகப்படுத்தி திருமதி. மங்கையர்க்கரசி முதலியார் மற்றும் அவரின் பெறாமக்கள், சுற்றத்தார் குடும்பத்தினர் மேலும் மானிப்பாய், கட்டுடை ஊர் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*தேசமானிய இராமச்சந்திரன்*
*சட்ட ஆலோசகர் (ஜேர்மன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தொண்டர்
## சி.பொ.வ.மா.க.முதலியார்

அன்பால் அரவணைப்பால், பாசத்தால் இன்முகம் காட்டி வரவேற்கும் பண்பையும் கலகலக்கும் சிரிப்பொலியையும் மகிழ வைக்கும் பேச்சையும் எப்படி மறப்பது? காலஞ் சென்ற முதலியார் அவர்களை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் நன்கு தெரியும். எனது குடும்ப நண்பர் அகில இலங்கைத் தமிழ காங்கிரஸ் கட்சியின் தீவிர ஆதரவாளரும் முன்னாள் செயலாளருமான அவர் என்றும் தனக்கென்று வாழ்ந்தில்லை. பிறர் வாழ்வுக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து வாழ்ந்த ஓர் உயர்ந்த உத்தமர், உயர்ந்த ஓர் இலட்சியவாதி, காலை முதல் மாலை வரை இரவு பகல் என்று பாராது ஊருக்காக தமிழ் இனத்தின் வளர்ச்சிக்காக உழைத்த ஓர் பொது நலவாதி. இவ்விதமான நல்ல பண்புகள் நிறைந்த மனிதர்களை இன்றைய உலகில் காண்பது அரிது.

அமரரின் தந்தையார் சின்னத்துரை முதலியார் அவர்கள், காலஞ்சென்ற தமிழ் இனத்தின் தனிப்பெரும் தலைவர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் தமிழினம் சமஉரிமையுடன் வாழவேண்டும் என்ற நோக்கில் ஆரம்பித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபிப்பதற்கு அரும்பாடுபட்டு உழைத்த ஒரு பெருமகன். இக்கட்சியின் சார்பாக மானிப்பாய் தொகுதியில் இருமுறை (10000) பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்து மக்களுக்காக உழைத்த ஒரு மாபெரும் தொழிற்சங்கவாதியும் ஆவார். பிறர் நல்வாழ்விற்காக தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு பெருமகன் உயர்ந்த இலட்சியவாதி. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகவும் மக்களின் விடிவிற்காகவும் உழைத்த ஓர் அற்புத மனிதன். தமிழினம் விடுதலை பெற்று ஒருநாடு இருதேசம் என்ற தூரநோக்குடன் உழைத்த ஒரு பெருமகன். அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளென்று இவ்வுலகில் இல்லை. பார்வையில் சாந்த குணமுள்ளவர் செயலில் உறுதியானவர். யார் என்ன உதவி கேட்டாலும் ஏழையென்றோ பணக்காரனென்றோ பாராமல் முகமலர்ச்சியுடன் செய்து கொடுக்கும் உயர்ந்த பண்பாளன். அவர் முகத்தில் கோபம் என்பது கிடையாது. தனது நண்பர்களை மதித்து செயல்படுபவர். புன்னகை தரும் முகம் பிறரைக் கனம் பண்ணும் குணம், அன்பு மிளிர்ந்திடும் வார்த்தைகளை உரைத்து கரைகாண இயலாத கலங்கட்கு கரைகாட்டும் ஓர் கலங்கரை விளங்கு. உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய நற்பண்புகளைக் கொண்ட ஓர் மாமனிதர்.

கடமை வீரனின் மரணம் அன்னாரின் உறவினர்க்கு மட்டுமல்ல நண்பர்களுக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஈழத் தமிழினத்திற்கும் ஈடு செய்யமுடியாத ஓர் பேரிழப்பாகும். இப்படியான நல்ல மனிதர்களை யாரும் இழக்க விரும்ப மாட்டார்கள். ஆனால் இவ்வுலகில் அவர் வாழ வேண்டிய காலம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் முடிந்ததனால் இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டார் என்பது உண்மை. அவரது பிரிவால் துயருற்றுக் கொண்டிருக்கும் அன்னாரது உறவினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக் கொண்டு அவரது ஆன்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

*அமரர் ஜி.ஜி. பொன்னபலம் குடும்பத்தினர்*

***இ. எ. ஆனந்தராஜா***

*தலைவர்,*

*அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஸ்ரீ சாய்ராம்

**V.SEGARAJASINGAM**
**A.M.I.T. (LOND) Rtd. CSM**
**JUSTICE OF THE PEACE**
**MANIPAY.** **T.P : 021 225 5133**

# சேவையின் மைந்தன்

"ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்று கூறுவர். ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதல்ல முக்கியம் மாறாக அவர் எப்படி வாழ்ந்தார் எதைச் சாதித்தார் என்பது தான் முக்கியம்.

இந்த வகையில் அமரர் சி.பொ.வ.மா.க முதலியார் விவசாயத்திற்கும் விவாசாயிகளின் முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்தவர்.

தண்ணீர் எங்கள் உயிர்நாடி உயிரிலும் மேலானது. இந்த விலைமதிக்க முடியாத குடிநீரை நவாலிக்கு கொண்டுவர முதலியார் அவர்கள் திரு. செ. ரமேஷ் உடன் அல்லும் பகலும் அயராது உழைத்தார். விசுவாசிகளுக்கும், விவசாயத்திற்கும் ஊன்று கோலாகவும் உறுதுணையாகவும் சீர்தூக்கிப் பார்த்தவர்.

யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை முன்னாள் நீர்வழங்கல் சபை அமைச்சர் எம். எல். எம் அதாவுல்லா அவர்களின் கவனத்திற்கு முன்வைத்தவர். அன்றியும் வினைத்திறனாக்கியவர். அன்னாரின் சேவை அளப்பரியது.

நல்ல சேவையாளனை பறிகொடுத்து விட்டோம். அன்னாரின் இழப்பு பேர் இழப்பு பெரிய இழப்பு அமரரின் சேவைகள் தொடர வேண்டும்.

அன்னாரின் பாரியாருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினற்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

***வை. செகராரசிங்கம் J.P. U.M***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழுக்கியாறு...... சிறு விளக்கம்

*சாகித்தியா ரத்னா க. குணராசா (செங்கை ஆழியான்)*

அமரர் சி.பொ.வ.மா.க.முதலியார் அவர்களின் மறைவு குறித்து எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் உதவி அரச அதிபராகக் கடமையாற்றியபோது கச்சேரியில் நிகழ்ந்த மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் இரண்டாம் நாள் கலந்து கொள்ள நேர்ந்தது. அப்போது வயதில் முதிர்ந்த முதலியார் அவர்களும் திறமையுடன் மாவட்டத்தின் விவசாய விருத்திக்கான வழிவகை பற்றிக் கூறியவற்றை அவதானித்தேன். அவ்வேளையே அவர்மீது எனக்கு மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது. முதலியார் அவர்கள் இலங்கையில் விவசாயம் பற்றி நன்கு தெரிந்தவராகக் காணப்பட்டார். ஒரு விவசாயியாகவும், சமூகத் தொண்டனாகவும் விளங்கிய இவர் விவசாயத்தையே தனது மூலத் தொழிலாகக் கொண்டிருந்தார். மக்களது விவசாய அபிவிருத்திக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒருவராவர். அதனால் அவர் விவசாயிகளின் மன்னனாக விளங்கினார். யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய செயற்பாடுகளில் மட்டுமன்றி இலங்கையின் விவசாய முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார். யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சனையை எவ்வகையில் தீர்த்து தக்க ஓர் தீர்வு காண ஆசைப்பட்டு அது பற்றி பொக்கணை, கட்டுடை, நீர்க்குண்டு, வழுக்கியாறு என்பனவற்றை தக்கவாறு பயன்படுத்தி இப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என நம்பினார். கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலியார் வழுக்கியாற்றின் அபிவிருத்தியில் தனது கவனத்தைச் செலுத்தினார். அதனால் அவர் விரும்பிய வழுக்கியாற்றைப் பற்றி நான் அறிந்தவரை சிறுவிளக்கத்தைத் தருவதன் மூலம் அவரது ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றேன்.

“யாழ்ப்பாண மாதா மலடி என்ற பெயர் எடுக்காது சத்திரசிகிச்சை மூலம் பெற்ற குழந்தையே வழுக்கியாறு” என்பது ரசிகமணி கனக செந்திநாதனின் கூற்று. வலிகாமத்தின் மத்தியில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஒரே ஒரு நன்னீர் ஆறாக வழுக்கியாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. தெல்லிப்பளையிலிருந்து அளவெட்டி, கந்தரோடையூடாக நவாலிக் கடலை அடைகின்றது. உண்மையில் நீர் நிறைந்து பாயும் நதியின் போக்கினை இது கொண்டதல்ல. வலிகாமத்தில் பெய்கின்ற மழைநீரை ஒருங்கே சேகரித்துப் பாய்கின்ற இயற்கையான ஒரு நீண்ட வெள்ள வாய்க்கால் ஆகக் காட்சி தருகின்றது. இதன் நீளம் ஏறத்தாள 24Km வரை இருக்கும். வலிகாமத்தின் மத்தியிலும் தெற்கிலும் பொழிகின்ற மழைநீர் பல்வேறு சிறுவெள்ள வாய்க்காலின் மூலம் ஓடி அளவெட்டியில் பெருமா கடவைபிள்ளைக் கோயிலின் முன்னுள்ள பினாக்கைக் குளத்தில் தேங்குகின்றது. இப் பினாக்கைக் குளத்தில் தேங்குகின்ற ஊர் வெள்ளம் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் அதாவது மழைக்காலத்தில் வழுக்கியாறாக தென்புறமாகப் பாய்கின்றது.

இதன் தோற்றம் குறித்து ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. விபீஷணன் இலங்கையை ஆண்டபோது பெருமாலிகன் என்ற அரக்கன் வழுக்கியாற்றை மறித்து யாழ்ப்பாணத்தை வெள்ளத்தினுள் அமிழ்த்தப் பார்த்தான். அப்போது பிள்ளையார் தோன்றி அவனைக் கொன்று வழுக்கியாற்றைப் பாய்வித்தார். பெருமாலிகன் மறித்தபொழுது நீர் தேங்கிய இடமே பினாக்கை குளமாகும். அக்குளத்திற்குப் பக்கத்தில் பெருமாகடவைப் பிள்ளையாரும் தோன்றினார். வழுக்கியாற்றின் ஓட்டம் பினாக்கை குளத்திலிருந்து ஆரம்பமாகிறது. வழுக்கியாறு தோற்றம்பெறும் ஆரம்ப இடத்தின் இருமருங்கும் தோட்ட நிலங்கள் காணப்படுகின்றன. பினாக்கை குளக்கட்டு கிழக்கு மேற்காக 1/2km வரை நீண்டு கிடக்கின்றது. தோட்ட நிலங்களுக்கப்பால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல் வெளிகளும் பனந் தோட்டங்களும் பரந்து கிடக்கின்றன. குளத்தில் வடகிழக்கு மூலையில் சலவைத் தொழிலாளர் பலர் துணி துவைப்பர்.

சோளகம் வீசும் காலத்தில் வழுக்கியாற்றுப் படுக்கை வரண்டு கிடக்கும் அப்போது அதன் இருமருங்கும் காணப்படும் வயல்வெளிகளில் புழுதி பறந்து கொண்டிருக்கும். பொதுவாக வழுக்கியாற்றின் கரையில் ஏற்று நீர்ப்பாசனம் செய்யும் இணைப்பு மேடைகள் அமைந்திருக்கும். கிணறுகளைக் கொண்ட தோட்ட நிலங்களிலும் வயல் வெளிகளிலும் பூசணி, வெள்ளரி பயிரிடப் பட்டிருக்கும். வறண்ட காலநிலையின் போது முட்புதர்கள் மண்டிக்கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கியாறு தென்புறமாக 100m வரை சென்று பின் சற்று கிழக்குப் புறமாக செல்கிறது. வழுக்கியாறு தன் போக்கில் பல வெள்ளக்குளங்களை இணைத்துக் கொள்கிறது. அவ்வகையில் வழுக்கியாற்றுடன் உப்புக்குளம் இணைந்து கொள்கிறது. இரண்டாவது குளம் கந்தரோடைக் குளமாகும். வழுக்கியாற்றின் போக்கில் குறுக்கிடும் ஒரு பிரதான வீதி கந்தரோடைக் குளத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் கந்தரோடை மாசியப்பிட்டி வீதியாகும். இவ்விடத்தில் அடுத்தடுத்து நான்கு கோயில்கள் பிள்ளையார், மீனாட்சி அம்பாள், நாகம்மாள், கண்ணகை என்பன அமைந்துள்ளன.

இவ்வாற்றின் இன்னொரு சிறப்பு அதன் போக்கில் காணப்படும் மயானங்களாகும். அளவெட்டியிலிருந்து கட்டுடைவரை வயல்களும் கோயில்களும் காணப்படுகின்றன. கட்டுடைக்கு அப்பால் வயல்களையும் சுடலைகளையும் காணலாம். கந்தரோடைக் குளத்திற்கப்பால் பூவரச மரங்களுடன் கூடிய வயல்களையும் குறுகிய பனைவடலி நிலங்களையும் காணலாம். வழுக்கியாற்றின் போக்கில் குறுக்கிடும் இரண்டாவது பெரிய வீதியாக சங்குவேலி, கட்டுடை வீதியுள்ளது.

இதில் ஐந்து கண் மதகு அமைந்துள்ளது. இதனை கட்டுடை மதகு என்பர். இந்த ஐந்து கண் மதகுக்கப்பால் வழுக்கிறாற்றின் போக்கில் சில மாறுதல்கள் புலப்படுகின்றன. இதன் படுக்கை இருமடங்காக அகலமாகின்றது. அத்தோடு குடியிருப்புக்களைக் கொண்ட தென்னந்தோட்டங்களும் காணப்படுகின்றன. ஆங்காங்கே சுடலை காணப்படுகிறது. இதன் படுக்கையில் மணல் வெளியாகவும் உவர் நீர்த்தரையாகவும் காணப்படுகிறது. இவ்விடத்தில் வட்டுக்கோட்டை நவாலி வீதி குறுக்கிடுகிறது. வழுக்கியாறு உவர்நீருடன் மெதுவாக நகர்ந்து நவாலிக்கடலை அடைகிறது.

**“ஒரு துளி நீராவது வீணே கடலுடன் கலக்கக் கூடாது” என்பது இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவின் கொள்கை யாகும். அதனை மனதில் கொண்டு வழுக்கியாற்றில் இறுதி நீரை மறித்து முதலியார் குளம் என்னும் கட்டமைப்பு அமரர் முதலியார் அவர்கள் அமைத்துள்ளார். இதனைவிட பெரியதொரு சமூகத்தொண்டை வேறு எவராலும் ஆற்றிவிட முடியாது. இவரது இத்தொண்டு யாழ்ப்பாண வரலாற்றில் நிரந்தர இடத்தினைப் பெற்றுள்ளதை எவரும் மறுக்க முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுக்கையாறுத் திட்டத்துடன் இணைந்த முதலியார் குளம்



பல முன்மொழிவுகளை முன்னிறுத்தி செயற்படுத்திய சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்துடன் முழுநேர சேவையாளனாக முதலியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்கப்பட வேண்டியவர்கள் மறக்கப்படுவதில்லை

எங்கள் பண்பாடு கண்ட பெருமைக்குரிய கர்மவீரர் சி.பொ.வ.மா.க முதலியார் அவர்கள்.

அவரின் பிரிவுச் செய்தி நெஞ்சிலே எழுதுகின்ற நினைவுகள் பெறுமதியானவை. எமது முந்தையர்களான திராவிடத் தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த பண்பாட்டியலில் நீர் நிலைகளையண்டி வாழ்ந்த விவசாயக் குடியேற்றங்கள் முக்கியமானவை.

அவ் அடியொற்றி சீரணி நாகம்மை அருளாட்சி புரியும் வழுக்கையாற்றுப் பகுதியை அண்டியுள்ள சண்டிலிப்பாய் விவசாயக் கிராமத்தில் எங்கள் முதலியார் ஐயா அவர்களின் உதயம் ஆனைக்கோட்டை உயரப்புலம் மாப்பாண முதலி பரம்பரை வழித்தோன்றலான சின்னத்துரை முதலியார் விசலாட்சி அம்மையார் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வராக அவதரித்தார். முதலியார் ஐயா அவர்களின் குடும்பச் சூழல் மிகச் செழுமையானது. சைவமும் தமிழும் அறிவியல் ஆர்வமும் மிக்க பெற்றோர், சகோதரரின் அரவணைப்பில் இவர் இளமைக்கால வாழ்வு தனித்துவமாய் விளங்கியது. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு இணங்க முதலியார் ஐயா அவர்கள் தமது இளமைப் பராயத்திலேயே தான் சார்ந்த சமூக மேம்பாடே தனது நாளாந்தப் பணியென வரித்துக் கொண்டார். அதற்கிணங்க தனது தந்தையார் முன்னெடுத்த சமுதாய மேம்பாட்டுப் பணிகள் யாவற்றையும் தனயரான முதலியார் அவர்கள் தனதாக்கிக் கொண்டார்.

விவசாயக் கிராமத்தை வாழிடமாகக் கொண்டவரென்ற வகையில் அடிமட்ட ஏழை விவசாய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் இனங்கண்டு உரிய அமைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் போன்றவற்றிற்கு அப்பிரச்சினைகளை உரிய நேரங்களில் எடுத்துக் காட்டியதோடு அவற்றிற்கு உரிய தீர்வுகளையும் பெற்றுக் கொடுத்த செயல் வீரராகத் திகழ்ந்தார்.

தான் பிறந்த மண்ணின் விவசாயத்துறை வளர்ச்சி பெறுவதற்கு தடையாக இருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் விவசாய மேம்பாட்டிற்காகவும் அவரால் முன்மொழியப்பட்ட திட்ட வரைபுகளாக கட்டுடை நவாலி மக்களிற்கான பொக்கணை குடிநீர்த்திட்டம், யாழ்ப்பாணம் கிளிநொச்சி குடிநீர்த்திட்டம், விவசாய மக்களை ஓய்வூதியத்தில் இணைய வைத்த செயற்பாடு, விவசாயம் மேற்கொள்பவர்களை காப்புறுதி செய்யத் தூண்டிய செயற்றிட்டங்கள் என்பவற்றைக்கூறலாம்.

இந்த வகையில் யாழ். குடாநாட்டு விவசாயிகட்கு மட்டுமன்றி தீவு தழுவிய ரீதியிலும் தனிமனிதனாக நின்று விவசாய மக்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர் எங்கள் முதலியார் ஐயா என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை. இவற்றின் பேறாக இவரைத் தேடிவந்த விவசாயப் பட்டங்களோ எண்ணிலடங்காதன.

இவரின் விவசாயம் சார்ந்த சமூகப் பணிகளுக்குக் கிடைத்த உச்ச வெகுமானமாக ஆண்டுதோறும் சர்வதேச முதியோர் தினத்தில் Help Age எனும் நிறுவனத்தினால் வழங்கப்படும் தங்கவிருது கூட 2004ம் ஆண்டு இவர் வசமானது. இலங்கையில் நாடளாவிய ரீதியில் முதலியார் ஐயா உட்பட இரண்டு சிங்கள இனத்தவருக்கும், ஒரு இஸ்லாமியருக்குமாக நான்கு பேர்களுக்கு இவ் விருது வழங்கப்பட்டது. தாம் தேர்ந்து கொண்ட துறையில் குறித்தளவு காலப்பகுதியில் விஷேடமாகச் சொல்லப்படக்கூடிய வகையிலான பங்களிப்பை தேசத்திற்கும் சமூகத்திற்கும் செய்பவர்கட்கே Help Age நிறுவனத்தினால் இத் தங்க விருதானது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு மேலாக 1960களில் யாழ் மாவட்டத்தில் பிரபலம் பெற்றிருந்த சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த சுருட்டுத் தொழிலாளர்களுக்காக முதலில் ஓர் தொழிலாளர் சங்கத்தினை உருவாக்கி அவர்களுக்கான அடிப்படை வேதன நிர்ணயம், வேதன உயர்வு, விடுமுறை நாட்கள் என பல்வகையான தொழிலாளர் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தனிப்பெருந் தலைவராக விளங்கினார். சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை வழிநடாத்தியதோடு தனது தந்தையின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் பிணக்கு மன்றத்தின் செயற்பாட்டை இப்பகுதியிலே வினைத்திறன் உடையதாகவும் மிளிர வைத்தார்.

இவ்வாறாக தமது இறுதி மூச்சுவரை கிராம அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி என பல்பரிமாணங்களிலும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தி மக்கள் சேவை புரிந்த எங்கள் முதலியார் ஐயா அவர்கள் வழித்தடத்தில் பணிபுரிவதே அவர்களின் ஆன்ம சாந்திக்கு நாம் செய்யும் கைமாறாகும். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பெறாமக்கள், ஏனைய குடும்ப அங்கத்தவர்கட்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

*கந்தையா சிவராஜா*
*விரிவுரையாளர்,*
*சந்தைப்படுத்தல்துறை,*
*கல்வி இணைப்பாளர்,*
*வெளிவாரி பரீட்சைகள் அலகு,*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மன்னன் முதலியாருடன் கால்நூற்றாண்டு கால நட்பு

இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி எம்மை நீத்து நெடும்பயணம் போய்விட்ட என் இனிய நண்பர் முதலியாருக்கும் எனக்குமிடையில் பூத்துக்குலுங்கிய நறிய நட்புக்கு அகவை கால்நூற்றாண்டு.

நான் மானிப்பாய் பிரதேசசபையில் தலைவராக இருப்பதற்கு முன்னர் மூத்த அரசியல் நிலையில் தலைவர் பதவியை மானிப்பாய் பட்டினசபைக்கு அலங்கரித்தவர் சி.பொ.வ.ம.க.மு. அவர்கள்.

முதலியார் ஒரு வரலாற்று நாயகன், சரித்திரம் படைத்தவர். அவர் அரசியலில் மட்டுமன்றி விவசாயத்தின் ஊடாக ஏழை விவசாயிகளின் கண்ணீரை துடைத்தவர்.

யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் முதல் தலைவராக உயர்திரு. அமரர் சி.பொ.வ.மா.க. முதலியாரை எமது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமும், மாண்புமிகு அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நியமித்து பெருமை சேர்த்தார்.

இச் சம்மேளனம் - யாழ். மாவட்ட கமநலசேவைகள் திணைக்களத்திற்கு இணையாகச் செயற்பட்டு கமநல சேவைகள் திணைக்களம் செய்யாத பல அபிவிருத்திகளை முன்னெடுத்து விவசாயிகளுக்கு உதவியவர்.

இதனால் வடமாகாண விவசாயிகளின் நன்மதிப்பைப் பெற்றவர் முதலியார் ஐயா. உதவி தேடி சென்றவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்று வாசகம் வராது. என்னென்ன வழிகளில், யாரைப் பிடித்தால் இவ்வுதவியைச் செய்வார்கள் என நாடி, பிடித்து அவர்கள் ஊடாக உதவிகளைச் செய்து வாழவைத்தவர்.

இறுதியாக உள்ளூராட்சி சபை தேர்தலில் (2011) போட்டியிட்டு மக்கள் மனதை வென்றவர். எனினும் ஒரு குறிப்பிட்ட வாக்கு எண்ணிக்கையினால் தேர்தல் வெற்றி பெறாவிட்டாலும் அவரது சேவை பல்வேறு வழிகளிலும் மக்களைச் சென்றடைந்தது.

இதனால் அவருக்கு பல பதவிகள், பட்டங்கள், விருதுகள் என கிடைத்தது.

இன்று எமது கண்முன் முதலியார் அவர்கள் இல்லை. எனினும் முதலியாரின் நாமம் இறந்தபின்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அவரது இழப்பினால் துயருறும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

***வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்***
*மானிப்பாய் வலி. தென்மேற்கு பிரதேசசபை,*
*எதிர்க்கட்சித் தலைவரும்*
*மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும்*
*ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி EPDP.*

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருக்குள் மனிதனாக வாழ்ந்த மாமனிதர்

உயர்திரு. அமரர் சி.பொ.வ.மா.க. முதலியார் (சமாதான நீதவான்) அவர்கள் கடந்த 14.10.2012 அமரத்துவம் அடைந்த செய்தி எமது சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் சமூகத்தை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் சிரித்த முகமும் கனிவான பேச்சும் இளமைத் துடிப்புடனான சமூக சேவையும் அனைவரையும் கவரக்கூடியதாகவிருந்தன.

அமரர் அவர்கள் தனது வாழ்நாளில் பல வெற்றிகரமான சேவைகளையும் திட்டங்களையும் திறமையாகவும் அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றி மக்களின் மனங்களைக் கவர்ந்தவர். குறிப்பாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தினை வினைத்திறனுள்ளதாக்கியமை, சுன்னாகத்தில் இருந்து கட்டுடை நவாலிக்கு குழாய் மூலம் குடிதண்ணீரை வரவழைத்தமை, விவசாயிகளின் ஓய்வூதியத்தை ரூபா 1,000 இலிருந்து ரூபா 3,000 வரை கொண்டுவர முன்மொழிந்தமை, சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் ஊடாக அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி சுருட்டுத் தொழிலாளர்கள் பிரச்சனையைத் தீர்க்க முதன்முதலாக தொழில் பிணக்கு மத்தியஸ்தர் சபையை உருவாக்கியமை என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

அமரர் அவர்கள் முன்னாள் மானிப்பாய் கிராம பட்டினசபைத் தலைவராக இருந்ததுடன் மூத்த பிரஜைகளுக்கான Help Age நிறுவனத்தின் சிறந்த பிரஜைகளுக்கான தங்க விருதினை முதன் முதலாகப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அமரர் அவர்கள் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தினால் (HSCMF) வழங்கப்பட்ட **"விவசாயிகளின் தந்தை"** என்ற பட்டத்தினையும் விருதுகளையும் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு மேலதிகமாக அமரர் அவர்கள் விவசாயிகளின் மன்னன், விவசாயிகளின் தோழன், பசுமையின் காவலன் போன்ற பல பட்டங்களையும் பெற்றுக்கொண்டமை அனைவரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்களுக்கு யாருக்குமில்லாத பல சிறப்புக்கள் உண்டு. உதாரணமாக யாழ் மாவட்டத்தின் மூத்த விவசாயியாகவும், யாழ் மாவட்டத்திலே முதலாவதாக விவசாய ஓய்வூதியம் பெற்ற விவசாயி என்ற பெருமையும் அமரர் அவர்களையே சாரும். மேலும் அமரர் அவர்கள் கிராமத்தில் விவசாய சம்மேளனம், கிராம அபிவிருத்திச்சங்கம் போன்றவற்றில் தொடர்ந்து நிர்வாகசபை உறுப்பினராக அங்கத்துவம் வகித்து அமரத்துவம் அடையும்வரை பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பெரும் தொண்டாற்றியவர்.

அமரர் அவர்கள் தீவிர இந்துசமயப் பற்றாளராக இருந்து எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் போன்றவற்றைக் கட்டிக்காக்கவும் அவற்றைப் பேணிவளர்க்கவும் இவற்றை பிரதேச இளம் சமுதாயத்தினர் பின்பற்றவும் சிறந்த முறையில் வழிகாட்டிய மகான் ஆவார். அமரர் அவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மிக மூத்த பிரஜையாகவும் மிக முக்கிய பிரமுகராகவும் வாழ்ந்ததுடன் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, விவசாய மற்றும் சமயம் போன்ற சகல விடயங்களிலும் அவற்றின் அபிவிருத்தி, முன்னேற்றப் பாதைக்காக தனது முழுப்பங்களிப்பினையும் வழங்கியவர். உதாரணமாக வழுக்கையாற்றுத் திட்டம் செயற்படுத்தப்பட்டபொழுது அதனுடன் இணைந்த குளங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றின் நிர்மாண வேலைகளை தான் அங்கம் வகித்த விவசாய சம்மேளனத்தினால் பொறுப்பேற்று நிறைவேற்றியவர். அத்துடன் இவ் வழுக்கையாற்றுத் திட்டத்தினை வெற்றிகரமாக முடிவுறுத்த மிக மும்முரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இதன் மூலமாக உருப்பெற்ற முதலியார் வீதி அன்னாரின் மேற்படி முயற்சியை என்றும் நினைவுகூரும்.

மேலும் அமரர் அவர்கள் மானிப்பாய், கட்டுடை கிராம வளர்ச்சிக்காக சகல விடயங்களிலும் குறிப்பாக பாடசாலை, ஆலயங்கள், கிராமிய அபிவிருத்தி, விவசாய சம்மேளனம், வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் விநியோகம், ஏனைய பொதுவிடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் தன்மை ஈடுபடுத்திக்கொண்டவர். கிராமத்தில் ஏற்படும் காணிப் பிரச்சனை, குடும்பத் தகராறு, பிணக்குகள் போன்றவற்றைத் தீர்த்துவைத்து மக்களை நல்வழிப்படுத்தி மக்கள் மத்தியில் சிறந்த நியாயவாதியாகவும் மேலாளராகவும் இருந்ததுடன் சிறந்த அரசியல் ஞானம் மிக்கவராகவும் திகழ்ந்தவர். கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின்போது யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக அமரர் அவர்கள் உரிய தரப்பினர்களுக்கு ஓங்கிக்குரல் கொடுத்ததுடன் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முன்னின்றமை விவசாய சமூகத்தினரால் என்றும் மறக்கமுடியாதது ஆகும்.

அமரர் அவர்கள் தனது முதுமைக் காலத்திலும் தனது வயதினைப் பொருட்படுத்தாது இளைஞர்களைப் போன்று மிகத் துடிப்பாக பிரதேசத்தின் அனைத்து முன்னேற்றங்களிலும் பங்கெடுத்தவர். அமரர் அவர்கள் பிரதேச செயலகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்திப் பணிகளிலும் தன்னிச்சையாகப் பங்கெடுத்த தொண்டர். இவ்வாறு அமரர் அவர்கள் மக்களுக்கு தன்னாலான சமூக சேவைகளை தனது இறுதிமூச்சு உள்ளவரை சிறப்பாக வழங்கினார். இவரது தன்னலமற்ற வாழ்க்கைப் பயணமானது இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் சிறந்த உதாரணமாகவும் திகழ்கின்றது.

அன்னார் நல்ல சேவையாளர், நல்ல சமூகப் பற்றாளர் முழுமையாகப் பார்த்தால் நல்ல மனிதர். அவரை நினைவுகூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*சு. முரளிதரன்*
*பிரதேசசெயலர்,*
*பிரதேச செயலகம்,*
*சண்டிலிப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழுக்கையாற்றிற்கு வடிவமைத்த வள்ளல் வடபகுதியின் வர்ணபகவான் - இருபதாம் நூற்றாண்டின் யுகபுருசஷன் - குடாநாட்டின் விவசாயிகளின் கடைசி அலை

மனிதர்கள் எல்லோரும் வாழ்வில் எதையாவது தேடிக் கொள்ள வேண்டும் என அவலப்படுகின்றனர். அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அனேகமானோர் செல்வத்தை எப்படியாவது தேடி அதுதான் வாழ்வின் அதியுயர் தகுதி என பெருமகிழ்வுடன் வாழ்ந்து இறந்து போகின்றனர். சிறுவயதில் கல்விகற்று வளரும்போது பணத்தையல்லாது வேறு எவற்றையாவது தேடிக்கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்தான்

***"சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார்"***

விவசாய மன்னர் என அரசினால் கௌரவிக்கப்பட்டார். உண்மையில் வடக்கின் விவசாயிகளின் சந்தை வாய்ப்பு, மானியப் பெறுகைகள், அரச உதவிகள், கடன் பெறுகைகளும் சலுகைகளும், காப்புறுதி நீரியல் போன்ற அடிமட்டப் பிரச்சினைகட்கு தீர்வு கண்டவர். திடீரென தற்போது பெரியதோர் வெற்றிடம் ஏற்பட்டுவிட்டதாகத் தவிக்கின்றனர் விவசாயிகள்.

குன்றுகளற்ற வடபகுதியின் வழுக்கையாற்றிற்கு நிலையான உருவம் கொடுத்தவர், அரசினால் 220 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் நிறைவுபெற பெரும்பாடுபட்டவர். புவியியல் வரை படத்தில் வழுக்கையாற்றை நிலைபெறச் செய்த பேரன்பர் முதலியார் என்றால் எவரும் மறுப்புக் கருத்து தெரிவிக்கமாட்டார்கள். **"வடக்கின் வர்ண பகவான்"** எனப் புவியியலாளர்களும் வடக்கின் அரசியலாளர்களும் விவசாயிகளும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர் இறுதி அஞ்சலுரை நிகழ்வின் போது.

அன்னாரது பிரிவால் திக்கற்று தவிக்கும் துணைவியார், உறவினர், பேரன்பர்கட்கு அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

*பொ. சிறீஸ்கந்தராசா*
*முன்னாள் ஆசிரியரும், பிரதி அதிபரும் - யாழ் இந்துக்கல்லூரி,*
*தவிசாளர், பிரதேசசபை, பூநகரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாணிக்கம்

"நெருநெல் உளனொருவன் இன்றில்லை
என்னும் பெருமை உடைத்திவ்வுலகு"

என்ற பெருமையை தனதாக்கி உறவுகள் திகைக்க அமரராகிவிட்ட திருவாளர் சி.பொ.வ.மா.க.முதலியார் அவர்களின் மறைவு தமிழர்களின் வாழ்வுக்கும் எமது தேசவள விவசாய சம்மேளனத்திற்கும் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த விவசாய அமைப்புக்கள், பொது அமைப்புக்களுக்கும், வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்திவிட்ட உண்மையைக் காலகட்டத்தில் நாம் உணர வேண்டியவர்களாயுள்ளோம். மனித வாழ்வில் மரணம் என்பது நிச்சயமானது ஒன்றாக இருந்த போதும் இவரது மரணம் எம்மைத் திகைக்க வைக்கின்றது.

அன்னார் தமிழுக்காகவும், சமயத்திற்காகவும், நாட்டிற் காகவும் ஆற்றிய பங்கு அளப்பரியது. வழுக்கை ஆற்றுத்திட்டம் - இத்திட்டம் பல மில்லியன் ரூபாவில் துணிச்சலுடன் செய்து முடித்த பெருமையுடன் பொக்கணையில் இருந்து நன்நீர் திட்டம், விவசாயிகளுக்கான இலவச உள்ளீடுகள் பெற்றுக்கொடுப்பது போன்ற பல நற்பணிகளை எல்லாம் தனது வயது முதிர்ந்த காலத்திலும் இளமைத்துடிப்புடன் சேவையாற்றியமை யாரும் மறக்கமுடியாத உண்மையாகும்.

இவர் தனது மன ஆற்றலால் விவசாய மன்னன் என்ற பட்டத்தைப் பெற்றதோடு ஒரு பொற்கிளியையும் பரிசாக வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். அதனை தன்வசம் வையாது விவசாயிகள் தேவைக்கு, இதனை யாரும் நல்லவிலை கொடுத்து வாங்கினால் அவ்வளவு பணத்தையும் தான் விவசாயிகள் நலன்திட்டத்திற்கே பயன்படுத்த தயாராக உள்ளேன் என்று கூறிய பெருமையும், சிறந்த நன்நோக்கம், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், நேர்மை, நிதானம் இவைகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற நற்குணசீலராகவும் எக்காலமும் அவர் நெற்றியில் சிவசின்னமாகிய திருநீறு இல்லாது இருந்தது கிடையாது. அத்தோடு இல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மரபுவழி தேசிய உடையுடன்தான் அவரை எங்கும் காணலாம். அவர் வாழ்வு தனக்காக வாழாது தனது கிராமத்திற்காக வாழ்ந்தார் என்பதனை, அவரின் புகழுடம்பிற்கு அளப்பரிய சேவை பற்றி இரங்கல் உரைமூலம் நாம் உணரக்கூடியதாக அமைந்துள்ளது.

விவசாயிகள் தோழன் என்ற பெருமையைப் பெற்றதோடு அல்லாது விவசாயிகள் நலன்கருதி குறைந்த விலையில் விவசாயிகளுக்குப் பொருட்கள் கொடுக்கவேண்டுமென்ற தனது இலட்சியத்தையும் நிலைநிறுத்தி புன்னாலைக்கட்டுவனில் ஒரு களஞ்சியம் அமைத்து சேவையாற்றியுள்ளார். அன்னார் தன் அளப்பரிய சேவைகளை தான் வாழ்ந்திட்ட கிராம வளர்ச்சிக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். பாடசாலை அபிவிருத்தியாகட்டும் விவசாய முன்னேற்றமாகட்டும், அறநெறி ஓம்பலாகட்டும் எதுவும் அவர் ஒத்துழைப்புடனேயே கிராமத்தில் நடைந்தேறியுள்ளன.

இங்ஙனம் அளப்பரிய பணியாற்றிய அவ் உத்தமர் சொல்லாமல் கொள்ளாமல் நெடும்பயணம் சென்றுவிட்டார். இப்படியாக அவர் தனது வாழ்க்கையில் அரும்பணிகள் புரிந்து இன்று எம்மத்தியில் அவரின் புகழ் உடம்பு இல்லாவிட்டாலும் அவரின் பணி என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

“எழுதிச்செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
அழுது விழுந்து புரண்டாலும்
அதில் எழுத்தை மாற்றிடலாமோ?”

மறைவு என்பது மாற்றமுடியாத விதியாகி விட்டபோதும் அவருடைய பணிகள் என்றும் நிலைத்திருக்கும் இவரது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல அவர் வணங்கும் குலதெய்வத்தைத் தொழுது வணங்குகின்றேன்.

*நா. சிவதிருச்செந்துநாதர்*
*செயலாளர்*
*யா/ மா/ தேசவள விவசாய சம்மேளனம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் - சுவிற்சர்லாந்து
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE - SWITZERLAND
Tel & Fax : 031 302 38 70 , E- Mail : kumarinadu.net@hotmail.com
திருவள்ளுவர் ஆண்டு : 2043 President : Mr.P.Murugaverl, Bümpliz str 48, 3027 Bern.

# இலங்கையில் முதலியார் பரம்பரையின் இறுதி மூச்சு

சைவம் கமம் இரண்டும் இவருடன் இணைந்து வளர்ந்தது. பயிர் உற்பத்தியின் அவசியத்தை உணர்த்தியவர். உயிர்கள் வாழப் பயிர் உற்பத்தி அவசியம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்ததோடு. அதற்காகச் செயலாற்றிய யாழ்ப்பாணத்துப் பகலவன். பசுவளர்ப்பு, பால் உற்பத்தி, இயற்கைப்பசளை அதனால் வரும் உணவு உடல்நலம் தரவல்லது. இயற்கைபேணப்படவேண்டும் என்ற கட்டொழுங்கை அவர் தெளிவாகப் புரிந்து அதனையே தமிழர்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்று பாடுபட்டவர். அவர் விவசாயம் தொடர்பான தொண்டுகளையே அதிகம் செய்து வந்துள்ளார். குளங்கள் சீரமைக்கப் படவேண்டும் என்ற சீரியகருத்தை நடைமுறைப் படுத்தியும் ஊக்குவித்தும் வந்துள்ளார்.

சைவசமய பாரம்பரியங்களை பேணியதோடு தமது குடும்பக் கோவில்களை நிறுவிப்பராமரித்து வந்துள்ளார். இதற்கான பொருளாதார செலவினங்களை தாமே பொறுப்பேற்றுச் செய்து வந்துள்ளார். இறைநம்பிக்கை மிகுந்தவராக இருந்துவந்துள்ளார்.

இயற்கை பற்றியதாக்கம் அவரைப்பாதித்து இருந்தது என்பதற்கு சான்றாக இந்த ஆண்டு தைப்பொங்கலை அவர் கொண்டாடினார். தமிழர்களின் கொண்டாட்டம் தைப்பொங்கல் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். மறைமலை அடிகளாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை எந்தளவு உள்வாங்கியிருந்தார் என்பது வேறுவிடயம் ஆனால் தன்வாழ்வின் இறுதியாண்டில் கூட அவர் தைப்பொங்கலைக் கொண்டாடியதை தொலைக்காட்சி ஒன்றில் பார்த்தேன். அதிலிருந்து அவர் என்மனதில் இடம்பெற்றிருக்கின்றார். யாழ்குடாநாட்டிற்கு நீர் பற்றாக் குறை வரும்: நிலநீர் அற்றுப்போகும் என்பதை உணர்ந்து கிளிநொச்சி இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குழாய் மூலம் நீர்பெறும் திட்டத்திற்கு உலகவங்கியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அத்திட்டத்திற்கான நிதியினைப் பெற்றுக்கொடுத்த ஆற்றல் மிக்கபெரியவர். எந்தத் தமிழ் அரசியல்வாதிகளும் சாதிக்காததை ஒரு முதலியாராக இருந்து சாதித்திருப்பதை பெரிய சாதனையாகவே நாம் பார்க்கவேண்டும். ஆங்கிலமொழி ஆற்றலும் அதற்கு காரணம் எனலாம்.

இவரின் சகோதரரின் மகன் செந்தூர்ச் செல்வன் சுவிற்சர்லாந்தில் இறைவிடயங்களிலும் தமிழியக்கருத்திலும் ஈடுபாடுடையவராக விளங்குகின்றார் கலைத்துறையில் பல குரல் வல்லவனாக பலரை மகிழ்விக்கும் கலைஞராக விளங்குகின்றார். உலகத்தமிழ்பண்பாட்டு இயக்கத்தின் அரசியல் சாராக்கொள்கை களுக்கு என்னுடன் எப்போதும் துணைநிற்கின்றார். அந்தவகையில் மதிப்பிற்குரிய அமரர் முதலியார் அவர்கள் அறிஞர் அண்ணாவின் கொள்கைவழி, மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற கருத்துப்படி எமது கருத்துக்களையும் ஏற்றார். தனது கருத்துக்களையும் மிகவும் பண்பாக எம்முடன் பகிர்ந்தார். அவரை தமிழ்க்குமுகாயம் (சமுதாயம்) முழுமையாகப் பயன்படுத்தி நன்மை அடையவில்லை என்றே நான் வருந்துகின்றேன். உலக அமைப்புகளுக்கு மடல் எழுதுவது என்பது எத்தகைய விடயம் என்பதனை அறிவேன். அவரின் பல மடல்களை எழுதி அனுப்பி தமிழ்க்குமுகாயம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. இவர் மக்களுக்காகவே வாழ்ந்தவர். அவரின் 78 வருட வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திடமோ, தனியாரிடமோ ஊதியத்திற்கு வேலை செய்யாதவர் என்ற விடயத்தை இவர் மகன் முதலியார் செந்தூர்ச்செல்வன் மூலம் அறிந்துகொண்டேன்.

புதிய தலைமுறைகள் பல தொழில்நுட்பங்களை உள்வாங்கியிருந்தாலும் இவரின் பட்டறிவுகள்(அனுபவங்கள்) இணையும் போது பயன்கள் அதிகரிக்கும். யாழ்ப்பாணம் மழைநீரை நிலத்திற்குகீழான நீராகவும் ஏரிநீராவும் பாதுகாக்கவேண்டும் என்ற கருத்து உலகளவிலான மதிப்பிற்குரியது. வள்ளுவர் அவர்கள் கடவுளுக்கு அடுத்து நீருக்கு இரண்டாம் இடம் கொடுத்தது போன்று இவரும் தன்வாழ்வில் நீரை எப்படிப்பேணுவது என்பதில் கருத்தாக இருந்ததை மீண்டும் நினைவுகூர்ந்து, முதலியார் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் அதிகநாட்கள் நோயால் பாதிக்கப்பட்டு வருந்தவில்லை அதிலிருந்தே அவர் இயற்கைவாழ்வு வாழ்ந்தார் தனக்கும் மற்றவர்களுக்கும் இடர் இன்றி இயற்கை எய்தினார். அவர் விரும்பியபடி ஆண்டவன் திருப்பாதங்கண்டு மகிழவேண்டும் என்று வழிபடுகின்றேன். முதலியார் அவர்களின் வாழ்க்கை நினைவு மலரினில் அடங்கிவிடாது என்பதனால், அவரின் பணிகள் வாழ்க்கை முறைகள் விவசாய முறைகள் ஆய்வுநூலாகவேண்டும் என்று நிறைவு செய்கின்றேன்.

***பொ. முருகவேள்,***<br>
*ஆசிரியர், சுவிசு.*<br>
*20.10.2012*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்காக உழைத்த சேவையாளன் அமரர் முதலியார்



சி.பொ.வ.மா.க.முதலியார், ஒரு விவசாயி. சமூக ஆர்வலர், அரசியல் அபிமானி எல்லாவற்றுக்கும் மேலாக மனிதநேயம் மிக்க — அன்புள்ளம் கொண்ட ஒரு பெருந்தகையாளர். கடந்த 14.01.1934இல் மானிப்பாய் கட்டுடையில் அவதரித்தார். இளமைக்காலத்தில் ஆங்கில மொழியில் கல்வியைக் கற்று தேறிய இவர் பன்முக பார்வை கொண்ட பன்முக சேவையாளனாக விளங்கினார். அக்காலப்பகுதியில் இருந்து இன்று வரை அதாவது கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத்தை தனது மையத் தொழிலாளகக் கொண்டு தனக்கும் வடபால் பிரதேச விவசாய மக்களின் வளர்ச்சி — அபிவிருத்திக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றியவர். இக் காலங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் அவர்களது பாதிப்புக்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார்.

இதனால் அவருக்கு விவசாயிகளின் தோழன் — விவசாயிகளின் மன்னன் — விவசாயிகளின் தந்தை போன்ற பட்டங்களும் — விருதுகளும் அரச இலாகாவினாலும் — பொது அமைப்புக்களினாலும் காலத்திற்குக் காலம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. மேலும் நீதி அமைச்சினால் அவருக்கு சமாதான நீதவான் சிரேஷ்ட மத்தியஸ்தர் போன்ற பதவிகள் அவரை நாடிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட யாழ். மாவட்டத்தின் தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் முதல் தலைவராக விளங்கிய முதலியார் யாழ். மாவட்டத்தை மட்டும் பிரதிபலித்து நிற்கவில்லை. அகில இலங்கையில் உள்ள விவசாயிகளுக்கும் நன்மை கிட்ட வேண்டும் என்ற ரீதியில் பொதுமை வாதியாகச் செயற்பட்ட செயல்வீரன்.




இறுதியாக அதாவது சாவை ஏற்றுக்கொள்வதற்கு இருவாரத்திற்கு முன்னர் நாடுதழுவிய ரீதியில் உள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கும், அடிப்படை ஓய்வூதியமாக 3000 ரூபா வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2013 வரவு செலவுத் திட்ட ஏற்பாட்டில் ஒதுக்கீடு செய்ய முன்வர வேண்டும் என இறுதி கடிதம் அனுப்பி இருந்தார். மூத்த பிரஜைக்கான தங்க விருதும் கிண்ணமும் ஹெல்ப்பேஏஜ் (*Help Age*) நிறுவனத்தினால் கடந்த 2007ஆம் ஆண்டில் முதன் முதலாக ஒரு தமிழனுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம், வடபகுதிக்கு திசைதிரும்பி அதன் தன்மையை விளக்குவதற்காக முன்னாள் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவை அழைத்து விளக்கியதுடன் பொக்கணையில் இருந்து கட்டுடை – நவாலி குழாய் மூலமான குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் நிதி உதவியைப் பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சேரும். கட்டுடை சைவ வித்தியாசாலை, அட்டகிரி சைவ வித்தியாசாலை, நவாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NAVALY HSCMF - பட்டம் வழங்கி கௌரவித்தல்

வடமாகாணத்தில் - யாழ்ப்பாண மாவட்டத்தின் கடந்த

ஐந்து தசாப்த காலங்களுக்கு மேலாக

விவசாயத்துறையின் வளர்ச்சி - அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளிலும்

சிறப்புத் தொண்டாற்றியவரும் HELP AGE நிறுவனத்தின்

ஊடாக சிரேஸ்ட பிரஜைக்கான 'பொன் விருது' பெற்றவருமான தேச கீர்த்தி

உயர்திரு.சி.பொ.வ.மா.க.முதலியார் (ச.நீ)

அவர்களின் மேலான சேவைகளை கௌரவித்து பாராட்டி நவாலி

ஹேமலதா செல்வராஜா சிறுவர்

ஞாபகார்த்த நிதியம் (HSCMF)மனமுவந்து

"விவசாயிகளின் தந்தை"

எனும் கௌரவபட்டத்தை வழங்கி கௌரவிக்கின்றது.

செ.ரமேஷ் (ச.நீ)
M.A(Econ),M.A (Develop)
தலைவர்
HSCMF
NAVALY

2012

நவாலி HSCMF நிதியத்தினால் அமரர் சி.பொ.வ.மா.க முதலியார் (ச.நீ) அவர்களின் பன்முக சேவையைப் பாராட்டி வழங்கிய "விவசாயிகளின் தந்தை" (Father of Agrarian) எனும் கௌரவப்பட்டத்தை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயம் போன்ற பாடசாலை அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவியவர்.

இளைஞர் – சிறுவர் என பல அணிகளை கிராமிய மட்டத்தில் உருவாக்கியவர். இதனால் தான் இவர் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர், கமநல சேவைகள் நிலைய கமக்குழுத் தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் என பல தலைமைப் பதவிகளை வகித்தவர். இவருக்கு மாவிட்டபுரத்தைச் சேர்ந்த மங்கையற்கரசி என்பவர் மனைவியாக வாய்க்கப் பெற்றார். அவரும் முதலியாருடன் ஒன்றித்து பல்வேறு பணிகளைச் செய்தவர்.

இதனால் அவரது சேவைக்காக, தேசத்தின் மணிமகுடமாக செயற்பட்ட முதலியார் ஐயாவுக்கு "தேசகீர்த்தி" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. இவ்வாறாக விவசாயிகளுக்காக தன்னை அர்ப்பணித்து இறுதிவரை விவசாயிகளின் தோழனாக இருந்து கடந்த 14ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய மானியூர் மருதடியானின் பாதங்களை வணங்குவோம்.

செ. ரமேஷ் (ச.நீ)
செயலாளர்,
வேலணை பிரதேசசபை.

உதயன் நாளேடு.
27.10.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையான மனிதர் முதலியார்

மனிதப் பிறவி மாண்புமிக்கது என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் எங்கள் அன்புக்கும் - மதிப்புக்குரியவர் முதலியார் ஐயா ஆவார்.

இவர் ஆத்மிகவாதியாக - சமூகத்தொண்டனாக தனக்கென வாழா பெரும் தகையாளன்.

இவர் உயர்கொள்கைப் பிடிப்பும் பிறர்துயர் துடைக்கும் ஆர்வமும் பெரும் உள்ளம் கொண்ட மிகச் சிறந்த மக்கள் தொண்டன்.

**இவர் எடுத்த எக்காரியங்களிலும் தளரா உறுதியும் சிரத்தையும் கொண்டவர். இவருக்கு விவசாயிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள் என்ற நீண்ட நண்பர்குழாம் உண்டு. அன்னார் நேர்மை - கன்னியம் - கட்டுப்பாடு - ஈய்விரக்கம் என்னும் மொத்தம் வடிவமாக திகழ்ந்தவர்.**

விவசாயத்தை செய்யும் தொழிலே தெய்வம் என்பதுக்கு இணங்க திறமையை வளர்த்து இனிய முகம் காட்டும் அன்பாளர் - பண்பாளர் ஆவார்.

இவரது சேவை வரையற்றது, எண்ணற்றது. இதனால்தான் அவருக்கு இறுதியாக நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிறுவனத்தால் "விவசாயிகளின் தந்தை" எனும் கௌரவ பட்டத்தை வழங்கியதைக் கேள்வியுற்றேன்.

அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தார்க்கு மிக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*த. நடனேந்திரன்*
*உறுப்பினரும், தொழில்நுட்பக்குழுத் தலைவர்,*
*வலிகாமம் மேற்கு பிரதேசசபை,*
*சுழிபுரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் எம் மனதில்.....

ஆல் எனவே தளைத்தரசு போல் செழித்து அன்பரெலாம் சாலவும் வாழ்த்திட அன்போடும் பண்போடும் எமை ஆட்கொண்ட அருங்குணசீலன் கட்டுடை வாழ் உயர்திரு. சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார்.

இம்மகான் அரும்பணிகளினை எடுத்துரைப்பது சமூக அபிவிருத்தி மன்றத்தின் பணியாகும். ஏழைகளின் தோழனாய் விவசாயிகளின் பங்காளனாய் மக்களின் துயர்துடைத்திடும் தூயவனாய் தணியாத தாகம் கொண்டு பாராளுமன்றம் வரை பணிதனை மேற்கொண்ட வரலாற்றினை மறந்திடுவோமா.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் இணைப்பதிகாரியாக, அரிய நற்செய்திகள் வழங்கும் ஆலோசகராக, இன்முகம் காட்டும் இனியவனாக, தான் மட்டும் பணி செய்யாது தன் துணைவியாரையும் பணிதனில் பங்குகொள்ள வைத்து சுயநலம் தேடும் உலகில் பொதுநலமே செய்யும் போதையுடன் தன் நோய்தனை கருத்தில் கொள்ளாது மக்களின் சேவையே மகேசன் சேவையென்ற மாபெரும் பணியினை சிரமேற் கொண்டு ஆற்றிய பணிதனை யாரால் மறந்திட முடியும்.

விவசாயி வாழ்விலே விடிவெள்ளியாகி பற்பல பட்டங்கள் விருதுகள், தாகம் தீர்க்க தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி என்பவற்றை அரும்பெரும் சிரமத்துடன் ஆற்றி மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற ஐயா கதிர்காம முதலியாரே காலமெல்லாம் உம்பணி எம் நினைவில் ஐயா.

*தலைவர், பணிப்பாளர்,*
*பணியாளர்கள், அங்கத்தவர்கள்*
*சமூக அபிவிருத்தி மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணுவிலிருந்து பின்னர் உயரப்புலத்தில் குடியேறிய பேராயிரமுடையான்

**சி.பொ.வ.மா.க.முதலியார் தந்தையாரின் திருமண வாழ்த்துப்பா**

**சி.பாலசுப்பிரமணிய சர்மாவின் "யாழ்ப்பாண வைபவம்" கஉ—வது பக்கம்**

**ஆ. முத்துத்தம்பிபிள்ளையின் "யாழ்ப்பாணச் சரித்திரம்" கஅ—பக்கம்**

**க. வேலுப்பிள்ளையின் "யாழ்ப்பாண வைபவ கௌமுதி"**

**ஆகியன யாழ்ப்பாண வரலாற்று நூல்களில் குறிப்பேட்டில் உள்ளது.**

**1930**

ஓம்

திருச்சிற்றம்பலம்.

திருவளர் செல்வன், போன்னம்பலனர் சின்னத்துரை அவர்கள்
திரு: இலங்கைநாயகன் அருந்தவப்புதல்வி, திருவளர்செல்வி,
விசாலாட்சியம்மையைத் தொல்லோர்வகுத்த இல்லறமுறைப்படி
கடிமணம் புரிந்துகொண்ட ஞான்றுபாடிய

## மங்கல நன்மொழி வாழ்த்து


இது
மங்கலமணமகன் மாட்டுப்பூண்டுகொண்டஎழுமையும்
தொடர்தரும் உழுவலன்பின் கெழுதகைமைக்கறிகுறியாக
யாழ்ப்பாணத்து, நவாலியூர் திரு: பாலசுப்பிரமணியம்
அவர்கள் பாடியது.

மண்ணின் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே:

தேவாரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் பெற்றோரின் திருமண ஊர்வலத்தின் போது
சின்னத்துரை - விசாலாட்சி முதலியார் - 1930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் தந்தை சின்னத்துரை முதலியார்
நடுவில் அமரர், அருகில் அவரின் அண்ணன்
சி.ஓ.வ.க.முதலியார் - 1938



இலங்கைநாயகம் மீனாட்சி - 1902
(அமரரின் பேரன், பேத்தி)



தொழிற்சங்கவாதிகளுடன் முதலியார் - 1967




பொன்னம்பலம் - நாகம்மை
முதலியார் நினைவுச் சின்னம் - 1958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப்பா

வெண்டிரைக் கடல்சூழ் மண்டிணி நிலத்து
அறுபே ருணர்வொடு செறிவுறும் ஆக்கை
மன்னுதல் அரிதரி தென்மனுர் புலவர்; அதுவே
வடகடற் பெய்த மணிநுகத் துளையுள்
தென்கடற் பெய்த கழிசெறிந் தற்றே;
மக்கள் யாக்கை மரீஇய நல்லுயிர்
கைக்கொளு மறநெறி யீரிரண் டாகும்; அவைதாம்
இல்லறந் துறவற மென்றிசி னோரே:
அந்நெறி யிரண்டினுள் முன்னது கிளப்பின்
அன்பு மறனும் பண்பும் பயனும்
இன்பமும் வீடும் மன்பெரும் புகழும்
தருமென மொழிப தமிழ்மறைப் புலவர்;
கொழிதமிழ்க் கடலுள் குளித்திடு பெரும!
வடமொழிக் கடைத்த வான்செவிப் புலவ!!
நீவிரும்,
மங்கலங் கெழுமிய மனைநெறிப் படர்ந்து
புன்னெறி ஓரீஇ நன்னெறி மரீஇச்
செய்வன செய்வன தகைமை யினாற்றிப்
பிறத்த லில்லாப் பெருவாழ் வெய்தி
மூவா வின்பம் முறைமையின் வேண்டலில்
செந்திரு வன்ன நந்தா அழகினள்
திங்க ளன்ன தண்மென் சாயலள்
அருந்ததி யன்ன திருந்திய கற்பினள்
இலங்கை நாயகன் நலங்கிளர் புதல்வி
ஆகிய விசாலாட் சியம்மையை மணந்து
மணியிற் கெழுமிய ஒளியே போன்றும்
மலரிற் கெழுமிய மணமே போன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனிற் கெழுமிய சுவையே போன்றும்
யாழிற் கெழுமிய இசையே போன்றும்
இருபே ரியாக்கைக் கோருயிராகிப்
பிரித லின்றிப் பேரன்பிற் றிளைத்து
ஒருவரை வணங்கி யிருவரை யேத்தி
மூவர்க் குதவி நால்வகைப் பயன் பெற
ஐவகை வேள்வியும் ஆற்றி மெய்யுறு
அறுவகைக் குற்றமும் மறுவறக் கடிந்து
எழுவகைப் பிறவியுந் தீயவை தீண்டாத்
தென்புல வாழ்க்கைக் கருங்கட னிறுக்கும்
யாழினுங் குழலினுந் தேனினும் பாலினும்
முதுசுவை தரூஉம் குதலையந் தீஞ்சொற்
குறுகுறு மெனநடைச் சிறுவரைப் பயந்து
மங்கல மனைக்கு நன்கலம் புனைந்து
ஆல்போற் றழைத்தறு கின்வே ரூன்றி
மூங்கிலிற் கிளைத்து மூவேழ் தலைமுறை
வழிவழிச் சிறந்து வாழிய பெரும!
எழின்மல வாழ்க்கைத் துணையொடு
விழுச்சீர் ஞாயிறும் மதியமும் போன்றே:

கட்டளைக் கலித்துறை.

சீரார் இலங்கைத் தனிநா யகன்தந்த செல்வமகள்
வாரா ரசிக்கண் விசாலாட்சிநாம மடவரலும்
ஏரா ரிளநலம் வாய்ந்தசின் னத்துரை ஏந்தலனும்
நேராக இல்லறம் பூண்டேழி வாழி நிலமிசையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலிருந்து பின்னர் உயரப்புலத்தில் குடியேறிய


### பேராயிரமுடையான்

இ. பாலசுப்பிரமணியசர்மாவின் "யாழ்ப்பாண வைபவம்" கஉ-வது பக்கம்
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் "யாழ்ப்பாணச் சரித்திரம் கஅ-வது பக்கம்
க. வேலுப்பிள்ளையின் "யாழ்ப்பாணவைபவ கௌமுதி" -வதுபக்கம்

உயரப்புலம்
மாப்பாண முதலி
பட்டப்பெயர்கள்

1. வன்னியசிங்க மாப்பாணமுதலி
2. குலநாயக மாப்பாணமுதலி
3. இருமரபுந் தூய உயர்குலமாப்பாணமுதலி

சண்டிருப்பாய்த் தொல்வழிச்
சைவவேளாண் தனிமரபு
வந்தோர்:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வழித்தோன்றல்

## உயரப்புலம் மாப்பாண முதலி பட்டப்பெயர்கள்

வன்னியசிங்க மாப்பாண முதலியார்
குலநாயக மாப்பாண முதலியார்
இருமரபுந் தூய உயர்குலமாப்பாண முதலியார்

**சண்டிருப்பாய்த் தொல்வழிச் சைவவேளாண் தனிமரபு வந்தோர்**

சூரியர் – கதிரர் – செல்லர் – அம்பலவாணர் – ஐயம்பிள்ளை – பொன்னம்பலம்

தேவேந்திரமுதலியார் – விசுவநாதர் – சுப்பிரமணியர் – மூத்ததம்பி – சின்னத்தம்பி – நாகம்மை

பொன்னம்பலம் + நாகம்மை – சின்னத்துரை

சண்டிருப்பாய் இரணதண்டிகை கனகராய முதலியார் – மூத்தபிள்ளை – சண்டிருப்பாய் வேலாயுதர் – பேரம்பலம் – இலங்கைநாயகம்

சண்டிருப்பாய் வீரகத்தியார் – இராமர் – நன்னித்தம்பி – மீனாட்சி

இலங்கைநாயகம் + மீனாட்சி – விசாலாட்சியம்மையார்

சின்னத்துரை + விசாலாட்சியம்மையார்:

- சின்னத்துரை ஓங்கார வடிவேலு கதிர்காம முதலியார் + பகவதி
- **சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார் + மங்கையற்கரசி**

பிள்ளைகள்:

- செந்தூர்செல்வி + சந்திரகுமார்
- செந்தூர்ச்செல்வன் முதலியார் + கௌரி
- செந்தூர்செழியன் முதலியார் + தர்சினி
- செந்தூர்வாசன் முதலியார் + கீத்தா

**தளிர்கள்**

| | | | |
|---|---|---|---|
| லக்சன் சந்திரகுமார் | லவணன் சந்திரகுமார் | லயனி சந்திரகுமார் | யாழினி சந்திரகுமார் |
| பவித்திரன் முதலியார் | திலக்ஷன் முதலியார் | பவித்திரா முதலியார் | கேசிகா முதலியார் |
| யதுர்ஷன் முதலியார் | வானுஜன் முதலியார் | மாதினி முதலியார் | கீர்த்தனா முதலியார் |
| பிரணவ் முதலியார் | மித்ருன் முதலியார் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லையா + மாருதப்புரவல்லி

ஞானேஸ்வரி + பாலச்சந்திரன்

**மங்கையற்கரசி + சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார்**

பத்மாவதி

ராயேஸ்வரி

பாலகிருஸ்ணன் + சித்திரா

- சிந்துஜா + சிவரூபன்
  - அபிநாத்
  - அபிசஜன்
- லாவன்ஜா + இளங்குமரன்
  - நிவேன்
  - ஜதுசா
- நிரோசன் + சுகன்ஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்

என்றும் எமது உள்ளத்தில் நிறைந்திருக்கும்

எங்கள் அன்புத் தெய்வம்

**சி.பொ.வ.மா.க முதலியார்**

எமை விட்டுப் பிரிந்த செய்தி அறிந்து உடன் வந்து
ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அன்பர்கள்
அனைவருக்கும், வெளிநாட்டில் இருந்து
அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும்
அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து
மலர்மாலை சாத்தி அனுதாபம் தெரிவித்து,
அஞ்சலி செலுத்திய அனைவருக்கும்,
இன்றைய ஆத்மா ஈடேற்றக் கிரியைகளிலும்
கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து
கொண்டவர்களுக்கும், இம்மலரினை அழகுற
அச்சிட்டு உதவிய றூபன் அச்சகத்தினருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Golden Awarding Ceremony

## C.P.V.M.K Muthaliyar (J.P)

## 1 st Tamil Person

HELPAGE SRI LANKA — Helping the AGED in need

**'INTERNATIONAL DAY OF THE OLDER PERSONS'**

Presentation of Golden Awards

ජාත්‍යන්තර වැඩිහිටි දිනය

ස්වර්ණ තිළිණ ප්‍රදානය

சர்வதேச முதியோர் தினம்

தங்க விருது வழங்கும் வைபவம்



**2004.10.01**

**සින්නතුරෛයි පොන්නම්පාල වන්නියා මාප්පන කතිර්ගාම් මුතලියාර් මහතා**





වී ගොවිතැනට අමතරව තවත් විවිධ හේතු සම්බන්ධතා පවත්වන ගොවි මහතෙකි. සින්නතුරෛයි පොන්නම්පාල වන්නියා මාප්පන කතිර්ගාම මුතලියාර් ගොවි මහතා. උතුරේ කාන්තාර පොළොවෙන් රන් අස්වනු ඉපදවීමට තම ශක්තිය හා දැනුම යොදන මේ ගොවි මහතා 2001දී යාපනය. කීරමලෛයි කෘෂිකර්ම පරීක්ෂක කොට්ඨාශයේ වී වගාව පිළිබඳ හොඳම ගොවියා වශයෙන්ද තේරුණි.

1959 දී අධ්‍යාපන පොදු සහතිකපත් විභාගය සමත්වී ඇති මොහු යාපනයේ කනිෂ්ඨ කාර්මික විද්‍යාලයේ ශිල්පීය පාඨමාලාවද හදාරා ඇත.

විවිධ සමිති සමාගම්වල නිලතල දරන මේ ගොවි මහතා සමස්ත ලංකා ද්‍රවිඩ සංගමයේද කාරක සභිකයෙකි. ඔහු වරක් මානිප්පායි නගර සභාවේ සභාපති වශයෙන්ද කටයුතු කර ඇත.

**Mr.Cinnathurai Ponnampala Vanniya Mappana Kathirgama Muthaliyar**

Mr. Cinnathurai Ponnampala Vanniya Mappana Kathirgama Muthaliyar is one of those intrepid breeds of farmers from the North toiling with the inhospitable environment to reap a golden harvest. In addition to paddy cultivation he is engaged in other persuits. He was adjudged the best farmer in the year 2001 in the Keeramalai Agricultural Instructor's Division of Jaffna.

Having passed the G C E (O/L) examination in 1959 he followed a course of studies at the Junior Technical College, Jaffna.

Mr. Kathirgama Muthaliyar is an office bearer of several associations and is also a Committee Member of the All Ceylon Tamil Congress. He also functioned as the Chairman of the Manipay Urban Council

றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org